# புது ரக துவாலைகள்!

☆

அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களைக்
கொண்டு உயர்ந்த முறையில் பல
ரகங்களில் தயாராகும் துவாலைகள்
எங்களிடம் கிடைக்கும்

☆

**லெக்ஷ்மி கைநெசவுத் தொழிற்சாலை**

*18, லெக்ஷ்மிபுரம், 7-வது தெரு,*

**மதுரை**

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்
சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்
சி. ராஜகோபாலாச்சாரியார்
சி. என். அண்ணாத்துரை M. A.

விலை அணா 12

கமலா பிரசுராலயம்
59, பிராட்வே :: சென்னை

# தொகுத்தது ஏன்?

நிகழாதது நிகழ்ந்தது ; தமிழிசை இயக்கத்தால்!

தமிழ்நாட்டின் பல்வேறு கருத்துக்கொண்ட தலைவர்களும் கூடினர்-ஒருமுகமாகவும் ஆதரித்தனர்.

தமிழிசை இயக்கம் தோன்ற வேண்டிய அவசியத்தைப்பற்றிச் **செட்டிநாட்டரசர்** அவர்களின் அரிய விளக்கம்.

**சர். ஆர். கே. எஸ்.** அவர்களின் அருமையான உரை.

**ராஜாஜி** அவர்களின் லாகவமான பேச்சு.

தமிழ் இசை இயக்கத்தை எதிர்ப்போரின் தகுதியற்ற கூற்றுக்களை தகர்த்தெறியும் **அண்ணாத்துரை** அவர்களின் ஆராய்ச்சி நிறைந்த விவாதம்.

இவ் இயக்கத்திற்கே புரட்சிகரமான கருத்தை உண்டு பண்ணும் புதுமைக்கவி **பாரதிதாசன்** அவர்களின் எண்ணம்.

இவைகளை,

தமிழ் மக்கள் ஒரே கோர்வையாக இதுவரை பெறவில்லை. அக்குறையைக் களையவே இத்தொகுப்பு நூல் வெளிவருகிறது. **"எது இசை?"** என்பதை இந்நூல் எடுத்துக்காட்டும்.

தமிழிசை இயக்கம், இன்றுள்ள பேரம் பேசும்-மந்த நிலையை விடுத்து, தீவிரமாக-புரட்சிப்பாதையில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே **நம்** கருத்தாகும்.

நம் வேண்டுதலுக் கிணைந்து கவிதை தந்த நம் புரட்சிக்கவிஞர் அவர்கட்கும், இதற்கென, ஆராய்ச்சி நிறைந்த நீண்ட கட்டுரை அனுப்பிய நண்பர் **திராவிடநாடு** ஆசிரியர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கட்கும், அறிஞர்களின் பேச்சுக்களைக் குறிப்பெடுத்துதவிய தோழர் **இராவணன்** அவர்கட்கும், இத்தொகுப்பு வேலையில் முனைந்து நின்ற **சர்ச்சில்** ஆசிரியர் திரு. **எஸ். வி. லிங்கம்** அவர்கட்கும், நமக்கு வேண்டிய சில குறிப்புகளைக் கொடுத்துதவிய தமிழ் இசைச் சங்கத்தினருக்கும், எம் இதயம் நிறைந்த நன்றி!

**வளர்க தமிழிசை!**

—ப. முத்தையா

மணக்காதா ?

---

உருவடைய ஒன்றுபட வாழ்வு கொள்ள
உரிமைபெற இன்பமுற நாளும் நாட்டின்
இருள்கடிய அறிவுபெறப் பெருந்தொண் டாற்றி
இயங்குமோர் தன்மானக் கழகத் தாயின்
திருவடியின் அருளாகப் பல எண்ணங்கள்
செயற்படுத்தக் கிடைப்பனவாம் ; அவற்றுள் ஒன்றே
தமிழிசையைப் பிறமொழியால் இசைத்தல் வேண்டாம்
"தமிசைபா ராட்டிடுவீர்" என்பதாகும். (1)

தமிழ்ப்பயிரில் இந்திஎனும் எருமை மேய்க்கத்
தவருக நினைத்தவரும், அவர்செல் வாக்கை
அமுதாக நினைப்பவரும் தமிழி சைக்கோர்
ஆதரவு தரவந்தார் ; எனினும் அன்னூர்
தமிழிசையைத் தவருன வழியிற் போக்கித்
தாங்கரிய பழிதாங்கா திருத்தல் வேண்டும்
தமிழுக்குப் பகையானோர் தமிழிசைக் கோ
தக்கபே ராதரவை நல்கு வார்கள் ? (2)

சமயவெறி சாதிவெறி மூடச் செய்கை
தமைவளர்த்தல் தம்நலத்தை வளர்த்தல் என்று
நமதருமை நாட்டினிலே இந்நாள் மட்டும்
நடை முறையால் காட்டிவரும் கூட்டத்தார்கள்
தமிழிசைப்பாட் டென்பதெலாம் வெறிப்பாட் டாகத்
தருவதற்கு முயல்வதின்றி வேறென் செய்வார் ?
தமிழ்ப்பாடல் மதம் சாதி மூடஎண்ணம்
தரும்பாட்டாய் இருப்பதினும் இலாமை நன்று. (3)

பாடல்பெறும் பொருள்களிலே கடவுள் ஒன்று !
பாடலெலாம் கடவுளுக்கென் றிருக்கு மட்டும்
பாடலிலே புதுப்பாங்கும் புதுக்க ருத்தும்
பல்பொருளின் நல்லழகும் உயர்வும், இந்த
நாடுபெறல் முடியாது. தன்னில் ஊறும்
நல்லூற்றுக் கவிஞர்களும் தோன்ற மாட்டார்
மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும் !
மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல் ! (4)

இசைப்புலமை யுள்ளவரிற் பெரும்பா லோர்க்கும்
இந்நாட்டில் தமிழறியார் எனினும், அன்னார்
கசந்துருகப் பாட்டெழுதிச் சிவனே என்று
கசிந்துருகி நிற்பாரேல், பொருள் அளிக்க
இசைந்திடவோ பலருள்ளார். எனினும் நாட்டில்
இனியதமிழ், இழுக்கின்றிச் சுவையும் சொல்லும்
பிசைந்தெழுந்தால் உணர்வுற்றே எழும்நா டென்னும்
பெற்றியினை அறிவாரிங் கில்லை யன்றே ! (5)

தமிழிசைக்கு மாநாடு கூட்டு கின்றார் ;
தம்சரக்கால் வாணிகம்செய் இசைவல் லாரில்
அமைவுற்ற பெண்டிரும்ஆ டவர்கள் தாமும்
அழைத்தபடி அங்குவந்து கூடு கின்றார் ;
இமைப்போதும் விட்டுவில காத செல்வர்,
எழிலடியார், வழக்கம்போல் வருகின் றார்கள் ;
தமக்காக என்றெண்ணி ஊரி லுள்ளார்
தடையின்றி அங்குவந்து நிறைகின் றார்கள். (6)

அவர்களிலே ஒருவர்மா நாட்டி னுக்கே
அருந்தலைவர் ; திறப்பாளர் ஒருவர் ; மற்றும்
அவரிலொரு வரவேற்புத் தலைவர் ஆவார் !
அத்தனைஆள் பேச்சினையும் ஆய்ந்து பார்த்தால்,
முதிர்ந்தபொரு ளாளியின்மேல் முடிந்த வாழ்த்தும்
முழக்குகின்ற புகழ்ச்சியுந்தாம் ! பின்போ, பாடல்,
மிதந்தோடி மாநாட்டுச் செல்வாக் காளர்
மேலெல்லாம் உளமெல்லாம்குளிர்ச்சி செய்யும். (7)

தமைமறந்த பொருளாளர், நண்பர் அங்குத்
தமிழிசைக்குத் தாமகிழ்தல் போலே அந்த
அமுதமொழி அழகினிலே சொக்கு வார்கள்!
அப்போதில் அந்தமயில் தெலுங்கிற் பாடும்!
தமிழிசைதான் அடடாவோ என்பார்! மேலும்,
சமத்கிருதம் பாடிடுவாள் அடுத்தாற் போலே!
தமிழிசைக்கு மாற்றமையா என்பார் மக்கள்.
தமிழிசைதான் என்பார்கள் மாநாட் டார்கள்! (8)

வாய்ப்பாட்டால் வருமானம் அடைவோர் உள்ளம்
வருந்தாமல் தீர்மானம் நிறைவே றும்!பின்
சாப்பாடு பெறுமானம் நடக்கும்! மற்றும்
தக்கபல வெகுமானம், முடிந்த பின்பு,
'காப்பாற்றப் பட்டதின்று தமிழின் மானம்
கண்டீரோ' என்றுரைத்துத் தியாகை யர்சீர்
போய்ப்பாடத், தம்மானம் அடமா னத்தால்
போக்கியவர், அவருக்கும் பணங்கொ டுப்பார். (9)

முழுவெற்றி அடைந்ததுவாம் தமிழி சைதான்!
முன்பெல்லாம் தமிழ் ஒன்றே பாடினோரும்,
அழலானுர் தெலுங்கினிலே வெற்றிக் குப்பின்!
அங்கங்கே தெலுங்கிசைக்குக் கட்டி டங்கள்
எழும்படி ஆனதன்றோ! உடலை விற்க
இணங்குகின்ற பெண்கள்சிலர் தங்க ளின்தாய்
மொழி விற்கத் தயங்குவரோ? பாடகர்கள்
முழுநாட்டு வான்ஒலியில் தெலுங்கி சைத்தார்! (10)

இசைப்பாட்டுக் குயிலினங்கள் வர, இருக்க,
ஏனென்றால் 'ஆம்' என்ன இவ்வா றுன
பசைப்புள்ள விருப்புக்கும், திரைக்குப் பின்னால்
பழிச்செயல்கள் புரிவதனை அறிந்தோர் பாடும்
வசைப்பாட்டின் அடைப்புக்கும், வழியைத் தேடி
மகிழ்வடைதல் அல்லாமல், இந்நாள் மட்டும்
கசப்பான நிலைமையிலே சிறிது மாற்றம்
கண்டதுண்டோ தமிழிசையின் இயக்கத் தாலே? (11)

நீர்கலந்து பால்விற்பான் தனை அடைந்து,
நீர்தவிர்த்துப் பால்விற்கக் கேட்டுக் கொண்டால்,
நீர்கலக்கும் வழக்கத்தை நீக்கிக் கொள்ளான் !
நீர்கலப்பான் கூட்டுறவை அறவே நீக்கி
ஊர்கலந்து, மக்களிடம் உணர்வெ ழுப்பி,
உள்ள நிலை மாற்றுவதே நேர்மை யாகும்.
நீர்கலந்தான் உடன்கலந்து நிற்ப தேனோ !
நீர்கலந்தானைச்சார்ந்தார் உறவே தற்கோ ! (12)

எந்நாளும் தமிழிசையே பாடு வோர்கள்
இருக்கின்றார் சிலர்,என்றால் அவரைப் விட்டுப்
பொன்னுகத் தெலுங்கிசைபா டிடுவார் தம்மைப்
போய்அழைப்பார் தமிழிசையை இயக்கு வோர்கள் !
சொன்னாலும் வாய்நாணும் செய்கை யன்றோ !
தொட்டதெலாம் மேற்பூச்சு, வஞ்சம், சூழ்ச்சி !
இந்நாடு விழிப்படையா திருக்க வில்லை ;
இழுத்தஇழுப் புக்குவரும் நிலையில் இல்லை ! (13)

தெலுங்கிசைத்தால் மறுப்பீர்கள் ! தமிழே பாடச்
செய்யுங்கள் ! அதற்காகத் திரண்டெ ழுங்கள் !
இலங்குதமிழ் மொழியினிலே பாடல் இல்லை
எனஉரைத்தால், அறையுங்கள் ! தமிழ மைப்பு
நலமுள்ள இசைக்கொவ்வா தென்பார் வாலை,
நறுக்குங்கள் ! இசைக்கு,மொழி வேண்டாம் என்னும்
விலங்குகளை வளையுங்கள் எனமக் கள்பால்
விண்டதுண்டோ தமிழிசையின் தலைவர் என்போர்? (14)

பெருமக்கள் நலம்பறிக்கும் தெலுங்குப் பாட்டைப்
பெருமக்கள் எதிர்க்கும்வகை செய்தல் வேண்டும் !
திருடருண்டு விழித்திருங்கள் பறிகொ டாதீர்,
செயல்செய்வீர் என்பதுதான் சரியே யன்றித்,
திருடர்களை வீட்டுக்கும் அழைத்துப் பேசித்
திருடருக்குப் பணம்கொடுத்துக் கூட்டு கின்ற
திருடர்மா நாட்டாலே திருட்டைத் தீர்க்க
முடியாதே என்றுதான் செப்பு கின்றேன். (15)

பல்லவிகள், கீர்த்தனங்கள், மற்று முள்ள
பலநுணுக்கம், இசைவிரிவு தெரிந்துள் ளாரின்
நல்லுதவி பெற்றுத்தான் தமிழி சைக்கு
நாம்ஏற்றம் தேடுவது முடியு மென்று
சொல்லுகின்றார் சிலபுலிகள்! அவர்க்கு நானும்
சொல்லுகின்றேன்; சுண்ணமிடிப் பார்கள் பாடும்
பல்வகைஇ லேசான இசைகள் போதும்;
பாரதியா ரேபோதும்; தியாகர் வேண்டாம்! (16)

விரிவான இராகமும்,பல் லவியும், மற்றும்
வெறும்சரளி யும்,கருவி வல்லவர் பால்
இருப்பனவே! பாடகர்கள் என்போ ரெல்லாம்,
இன்கவிதைத் தமிழ்ப் பழத்தின் தோலுரித்துத்
தரும்திறமை யடைந்தாலே போதும்! ஐயோ
தமிழ்ப்பாவை இசைப்புலியால் மாய்க்கவேண்டாம்;
நரம்பிழுப்பும், குறைகொள்ளிப் பிணப் பதைப்பும்,
நாய்க் குரைப்பும், தமிழ்ப்பாட்டை நண்ணவேண்டாம்.

செல்வர்களோ, இன்றுள்ள செய்தித் தாளால்
சிறப்பவரோ, சுவையுணர்வோர் என்பார் தாமோ,
சொல்லளவே கலந்தஇசைத் துளிகட் கன்றித்
தொழிற்புலமை காட்டுதற்கு முயலு கின்ற
வல்லநடை, மறைவான நிறஅ மைப்பின்
வாய்ப்பு,முழு தும்சுவைத்தல் இல்லை; ஆடித்
தொல்லையுறும் தலை; நகைத்துத் தொலைக்கும் வாய்தான்;
துடையில்தேள் கொட்டினும் எடார்தம் கையை! (18)

பணக்காரர் மகிழ்ச்சியிலே பொழுது போக்கி,
பார்ப்பதற்கோ பயன்விளைப்ப தாகக் காட்டித்
தணிக்கின்றார்!தம்விருப்பம்! அதற்குப் பேர்தான்
தமிழிசைஎன் றால்அதனை மறுப்பா ரில்லை
'மணக்காதா செந்தமிழ்தான் இசையால்' என்று
வழியன்பால் தொண்டுசெய வந்திட் டாரோ;
அணித்தான தமிழ்ப்புலவர் அருவ ருக்கும்
அறிவற்ற செயலென்றால் யார் மறுப்பார்? (19)

—கவி. பாரதிதாசன்.

# தமிழரின் மறு மலர்ச்சி !

" பிடி சாபம் !"

" ஏன் ஸ்வாமி ! என்ன அபசாரம் செய்து விட்டேன் ?"

" அபசாரம் செய்யவில்லையா ? உனக்கு விசேஷ ஆணவம் பிடித்துவிட்டது. எதற்கும், எப்போதும், தமிழ், தமிழ், என்று கூவுகிறாய். தமிழில் பேசு, தனித் தமிழைத் தேடு, தமிழிலேயே எழுது, தமிழில் பாடு என்று கிளர்ச்சிகள் செய்கிறாய். தமிழர் நாகரீகம், தமிழர் நிலை என்று பேசுகிறாய். தமிழ்நாடு என்றும் கேட்கிறாய். உன் தொல்லை வளர்ந்துவிட்டது."

" இதுவா அபசாரம் ? தமிழன் தமிழை, எழுத்தில் எண்ணத்தில், இசையில், காண, கேட்க விரும்புகிறான். இது எப்படித் தவறாகும் ?"

" தமிழ் இசை ஏன் ? இருக்கிற இசை போதாதா ? இத்தனை காலமாக இருந்துவந்த 'சுஜன ஜீவனா'வும் இனிமை ததும்பும் 'சுனோ சுனோ'வும் இருக்கும்போது, தமிழ்ப் பாடல்கள் என்று வேறு ஏன் வேண்டும் ?"

" தமிழனுக்கு தமிழ்ப் பாடல் வேண்டாமோ ?"

" தமிழா, நீ இங்ஙனம், எதிலும் தமிழ் தமிழ் என்று பேசிக் கொண்டே போகிறாய். அது எங்கு கொண்டுபோய் விடும் தெரியுமோ ? நீ குறுகி, கூனி குவலய மறியாத் தவளையாகி விடுவாய் "

" இல்லையே! தமிழில்எழுதும்போது, இன்பம் காண்கிறேன். தமிழ்க் கவிதை உள்ளத்தை கொள்ளை கொள்கிறது. தமிழ் இசை, நெஞ்சை அள்ளுகிறது. தமிழில்இருக்கும் இனிமையை உண்ண நான் அவாவுறுவது குற்றமாயின், நான் குற்றவாளிதான். ஆனால், உமது நோக்கம் என்ன ? நீர் தமிழனா ? ஆமெனில், உமக்கேன் இந்த தமிழ்ப்பற்று உண்டாகவில்லை ? தமிழைக் கண்டதும் ஏன் பதைக்கிறீர் ? அது எழுத்தாக வந்தால் எதிர்க்கிறீர். இசையில் வந்தால் சீறுகிறீர். நீர் ஆரியராதலால் எதிலும் ஆரியம் இருக்கப் பாடுபடுகிறீர். ஆரியத்தை ஒழிக்க, தமிழர் எந்தத் துறையிலே பாடுபட முன் வந்தாலும் எதிர்க்கிறீர்.

இனி உமது எதிர்ப்பைக் கண்டு, தமிழன் தன் காரியத்தைக் கவனியாது இருக்கப் போவதில்லை. **தமிழா! உன் தோள் வலிமை தரணி எலாம் அறியாதோ!** என்றதோர் இசை கேட்டேன். தடுக்க முடியாத பேராவல் கொண்டேன். தமிழே விழைவேன். அதை வளர்க்கவே முயலுவேன்.''

இது ஊரார் பல்வேறு இடங்களில், உரையாடுவதன் சுருக்கம். தமிழர் என்ற சொல் கிளப்பிவிட்ட எழுச்சி, எங்கெங்கு ஆரியம் தங்கித் தொல்லை தருகின்றதோ, அங்கெல்லாம், அதனை அறுத் தொழிக்கக் கிளம்பிவிட்டது. அதுகண்டு ஆரியர், தமது ஆதிக்கம் அழிவுபடுவதைத் தடுக்க, இன்று அண்டமுட்டக் கூக்குரலிட்டுப் பார்க்கின்றனர். நிலவொளியைக் கண்டு குக்கல் குலைக்குமாம்!

தமிழ்நாட்டிலே, தமிழ்ப்பாடல் கிடையாது. பாடவேண்டு மானால், தமிழ்ப் பாடகர்கள் கூச்சப்படுகின்றனர். தியாகய்யரின் கீர்த்தனங்களென்ன, சாமா சாஸ்திரியார் கிருதிகளென்ன, மற்றுமுள்ள தெலுங்குக் கீர்தத்னங்களைப்பாடினால் சங்கீத விற் பன்னர்கள் என்று பெயர் கிடைக்கும். தமிழில் என்ன பாடு வது! மளமள வென்று ஆறு தியாகய்யர் கிருதிகள் பாடிவிட்டு 'சுரம்' இரண்டு கிருதிகளுக்குப் போட்டுவிட்டு, ராகமாலிகையை ரசமாகப் பாடிவிட்டு, ஜாவளிக்குப்போய், கடைசியில் இரண்டு தமிழ்த் துக்கடாவைக் கிடுகிடுவெனப் பாடிவிட்டு, ''நீ நாம ரூப மூலகு'' என்று மங்களம் பாடி விடுவதை சங்கீத வித்வான்கள் சம்பிரதாயமாக்கிவிட்டனர். பெரிய வித்வான் என்பதற்கு இலட்சணமே இதுதான் என்று கருதிவிட்டனர். இதனை எதிர்த்து யாராவது தமிழ்ப் பாட்டுப் பாடக்கூடாதா என்றால், நாடக மேடைபோல் ஆகி விடுமே என்று நையாண்டி செய்வார். இது தமிழ் நாட்டில் பலகாலமாக இருந்துவரும் வாடிக்கை.

இசை இன்பத்தைத் தரவேண்டுமானால், அதைக் கேட் போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அதை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி! இதனை 'ஆரிய மேதாவிகள்' மறுக்கின்றனர்! என்ன அறிவீனம்!

நீக்ரோவின் நடனத்தைக் காண்கிறோம். கண்டுவிட்டு நகைக் கிறோம். ஆனால் நீக்ரோவுக்கு நெஞ்சு இழைகிறது நீக்ரோ நடனத்தைக் கண்டு! ஏன்? அவன் அதனைப் புரிந்துகொள்கிறான்.

நேற்று சித்தூர் பாடினார் அருமையாக, புஷ்பராகத்தை ஜொலிக்கச் செய்து என்று கூறினால், புஷ்பராகம் என்று ஒரு ராகம் இருப்பதாக எண்ணிக்கொள்ள எத்தனையோ பேர்கள்

உண்டு. அது அவர்கள் குற்றமுமல்ல. வராகம் என்று இன்னொரு ராகம் இருப்பதாக நம்பினாலும் நாம் ஆச்சரியப்படுவ தற்கில்லை. ராக விஷயங்கள், மக்களில் 100-க்கு எத்தனை பேருக் குத் தெரிய முடியும்? கருப்பையா என்பதற்குச் சுப்பையா என்று கையொப்பமிடும் பேர்வழிகள் நிரம்பியுள்ள நாட்டிலே நாம் இருக்கிறோம்.

கச்சேரிகளுக்குச் சென்று திரும்பியவர்கள், இன்னின்ன பாடல்கள் இன்ன ரசத்துடன் பாடப்பட்டன என்பதைப் பேசு வதைவிட, மிருதங்கக்காரரின் உச்சிக்குடுமி இத்தனை முறை அவிழ்ந்துவிட்டது; வித்வான் மூன்று முறை பால் குடித்தார்; பிடில் வாசிப்பவரின் முகம் சில சமயங்களிலே மாருதி வேடமா யிருந்தது என்று இவைகளை அதிகமாக பேசுவதைக் கேட் கிறோம். காரணம் அவர்கள் கேட்ட பாடல்களில் பல அவர் களுக்குப் புரிவதில்லை.

பெரும்பாலும், தியாகராஜ கீர்த்தனங்களையே பாடுகிறார்கள். அதிலே அடிக்கடி ராமா ராமா என்று வருவதைத் தெரிந்துகொண் டிருப்பார்களே ஒழிய, அதன் கருத்தை அறிந்துகொண்டவர்கள் அதிகம் பேர் இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே தெலுங்குக் கீர்த்தனங்களுக்குப் பொருள் விளங்கமுடியுமா? ஆந்திர நாட்டிலே 'அரவம்' தெரிகிறதா?

எனவே ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழோடு இசை பாட மறந்தவர்களுக்கு, தமிழ்ப் பாடல்கள் பாட ஓர் நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கி வைத்தார். நல்லதோர் தொகையை நன்கொடையாக ஒதுக்கி வைத்து, தமிழ்ப் பாடல்கள் இயற்றவும், பாடவும், ஆர்வம் வர, ஒரு வழி கண்டார்; அதற்காகக் கூடிய சிதம்பரம் மாநாட்டிலே, இசை வல்லோர் கூடித் தமிழ்ப் பாடல்களே பெரும்பாலும் பாடப்பட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இசையில் ஆரியம் புகுந்து இழுக்கு செய்வதைத் தடுக்க, தமிழ்நாடு தமிழ்ப் பாடல் கேட்பதைத் தர, கொடைவள்ளல் ராஜா சர் அவர்கள், செய்த இந்தப் பேருதவிக்கு, பார்ப்பனர்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். தமிழரின் எண்ணம் ஈடேறச் செய்வது கண்டு சீறுகின்றனர். தெலுங்குக் கீர்த்தனங்களுக்கும், இந்துஸ் தானி துக்கடாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதாடு கின்றனர். தமிழ் மறு மலர்ச்சி கண்டு ஆத்திரமடைந்து, ஆர்ப் பரிக்கின்றனர். 'இந்து' பத்திரிகை, இசையில் தமிழ் புகுவது கண்டு, குட்டித் தலையங்கமெழுதி, குறும்புத்தனமாகக் கண்டிக்கத் துணிந்துவிட்டது.

ஆரியரின் இந்த எதிர்ப்பு கண்டு தமிழர் அஞ்சத் தேவையில்லை. தமிழ் நாட்டிலே தமிழே இருத்தல் வேண்டும். தமிழருக்கு தமிழ் இசையே தேவை. அதுவே அவர்களுக்கு இன்பத்தைத் தரும். பார்ப்பனரின் பிழைப்பு பாதிக்கப்படும் என்று பதைத்துப் பயன் இல்லை ! ஆரியத்தை இலக்கியம், எண்ணம், இசை முதலிய எல்லாத் துறைகளிலுமிருந்து விரட்டி ஒழித்தால்தான், தமிழர் தமிழராக வாழ முடியும். ஆகவே, தமிழர்கள் இந்த ஆரிய எதிர்ப்பைக் கண்டு தளராமல் தனித் தமிழ், தமிழ் இசை ஆகியவற்றிற்கு உழைத்து, தமிழ் நாடு தனி நாடாவதையும் கண்டு களித்து வாழும் வகை உழைக்க முன் வரவேண்டும்.

* * *

## இதற்குமா எதிர்ப்பு ?

தமிழ் வளர்ச்சி, தமிழர் முன்னேற்றம் என்ற சொற்களைக் கேட்டால் போதும். உடனே ஒரு கூட்டத்தார், மற்ற மொழிகளுக்குக் கேடு ; மற்ற வகுப்பினருக்குத் தீங்கு என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள் ; அதனால் உடனே இவைகளுக்கு எதிர்ப்பு வேலை செய்யத் தொடங்கி விடுகிறார்கள். இவர்களுடைய விபரீத உணர்ச்சி காரணமாகவே, மொழிச்சண்டை வகுப்புச் சண்டை நமது நாட்டில் வலுத்து வருகின்றன. உண்மையிலேயே இத்தகைய நிலை ஏற்படுவதற்கு நாம் வருந்துகின்றோம்.

சில ஆண்டுகளுக்குமுன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல மகாநாடு நடைபெற்றன. தமிழ் நாட்டில் உள்ள புகழ்பெற்ற இசைவாணர்கள், இசைக்கலை அன்பர்கள், தமிழன்பர்கள் அனைவரும் அங்கு கூடினர். நான்கு நாட்கள் தமிழிசைக் ' கச்சேரிகள் ' நடத்தினர். தமிழிசையைப்பற்றிப் பலர் பேசினர். அம்மகாநாட்டில் ஒரு சிறந்த முடிவும் செய்யப்பட்டது.

" சங்கீதப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பாட்டுக்களையே சொல்லிக் கொடுக்க வேண்டும். சபைகளில் தமிழ்ப் பாட்டுக்களையே பாடவேண்டும் " என்று அம் மகாநாட்டினர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தனர்.

இத்தீர்மானத்தை எல்லா இசைக் கலைவாணர்களும் ஒப்புக் கொண்டனர். நமது நாட்டுப் பத்திரிகைகள் பலவும், இசைத் தமிழ் வளர்ச்சிக்கு வந்திருக்கும் நல்ல காலத்தைப்பற்றி நாவாரப் புகழ்ந்தன. தமிழ்க்கலை வளர்ச்சியிற் கருத்துடையவர்கள் அனைவரும் உள்ளங் குளிர்ந்தனர். இத்தகைய மகாநாட்டுக்குக் காரணராக இருக்கும் அண்ணாமலை பல்கலைக் கழக நிறுவனர், செட்டிநாட்டு அரசர் சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களைப் பாராட்டினர். அவருடைய அரும்பெரும் முயற்சிக்கு வாழ்த்துக் கூறினர்.

தமிழில் இசைப்பாடல்கள் இயற்றுவதற்குப் பரிசளிப்பதற்காகவும், அவற்றைப் பாடுவோரைப் பாராட்டுவதற்காகவும், செட்டிநாட்டு அரசர் அவர்கள் பெருந்தொகை நன்கொடையாக அளித்துள்ளார். இச்சிறந்த வேலையைத் தனது செல்வப் பிள்ளையாகிய அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் மூலமே செய்வதற்கு முன்வந்தார்.

தமிழ் மொழியே, இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்று முப்பிரிவை யுடையது. இவற்றுள் இசையென்பது இயற்றமிழிலும் உண்டு; நாடகத் தமிழிலும் உண்டு; தமிழே இசையுருவாக அமைந்தது. இசையே தமிழில்தான் முதன் முதலில் தோன்றிய தென்பது பல தமிழராய்ச்சியாளர்களின் முடிபு. தமிழாராய்ச்சியுடைய இசைவாணர்களுடைய முடிபும் இதுதான். இத்தகைய இசைத் தமிழ் இடைக்காலத்தில் குன்றி விட்டது. இசைவாணர்கள் பலர், தமிழ்ப்பாடல்கள் பாடுவதே அவமானமெனக் கருதியிருந்தனர். பொருள் விளங்காத பாடல்களையே பாடி வந்தனர்.

ஆனல், பல ஆண்டுகளாகப் பல தமிழன்பர்கள் இசைத்தமிழ் வளர்ச்சி யடையவேண்டுமெனக் கூறி வந்தனர். ஒவ்வொரு சங்கீத மகாநாடுகளிலும் இதுபற்றிப் பேசப்பட்டது. இம்முயற்சி காரணமாக இசைவாணர்கள் பலரும், சபைகளில் தமிழ்ப் பாடல்கள் பாடவும் தொடங்கினர். அப்பாடல்களை இசைக் காதலர்கள் சுவைக்கவும் தொடங்கினர். தமிழ்ப் பாடல்களைத் தமிழ் மக்கள் சுவைக்கின்றனர் என்பதை அறிந்தவுடன் இசைவாணர்களுக்கும் தமிழ்ச் 'சாகித்யம்' பாடுவதில் ஊக்கம் வளர்ந்து வந்தது.

அண்ணுமலை நகரில், பல்கலைக் கழகத்தில், இசைவாணர்களின் கூட்டத்தில், தமிழன்பர்களின் ஒத்துழைப்பின் பேரில், செய்யப்பட்ட முடிவு இசைவாணர்களுக்கு ஊக்கமளிக்கும்; இசைக் காதலர்களுக்கும் மகிழ்ச்சியளிக்கும்; இதில் ஐயமில்லை.

ஆனல், ஒரு சிலர், அண்ணுமலை நகரில் செய்யப்பட்டிருக்கும் அருமையான முடிவைக் குறைகூறத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள், தமிழிலேயே இசைபாடுவது என்று தொடங்கினல் கர்நாடக சங்கீதம் அழிந்துபோய்விடும்; தியாகராஜ கீர்த்தனங்கள் மறைந்து போய்விடும்; தமிழில் கர்நாடக சங்கீதத்தை அமைக்க முடியாது; என்னும் வாதத்துக்கு நம் மாகாணப் பத்திரிகையாகிய 'இந்து'வும் ஆதரவளித்து வருகிறது.

கர்நாடக சங்கீதம் ஒருநாளும் அழியாது. கர்நாடக சங்கீதத்தை அமைத்துப் பாடக்கூடிய பாடல்கள் தமிழில் ஏராள

மாக இயற்றிக்கொள்ளலாம். இதற்குச் செட்டிநாட்டு அரசரின் நன்கொடை பேருதவி செய்யும். தமிழ்நாட்டில் பண்டுதொட்டு நிலவி வரும் சங்கீதம் கர்நாடக சங்கீதமாகும். ஆதலால் தமிழ்ப் பாடல்கள் பாடுவதால் கர்நாடக சங்கீதம் அழிந்துவிடும் என்பது தமிழின் தன்மையை அறியாதவர் கூற்று. தியாகராஜ கீர்த்தனைகள் மறைந்துவிடுமென்று கூறுவதும் தவறு. அவற்றை யும் இசைவாணர்கள் பாடிக்கொண்டு தான் இருப்பார்கள். ஆத லால் கர்நாடக சங்கீதம் போய்விடும், தியாகராஜ கீர்த்தனை மறைந்துவிடும் என்று காரணங்கூறி தமிழிசையை வளர்க்கும் முயற்சிக்குத் தடை செய்வது சிறிதும் அறிவுக்குப் பொருந்தாத செயலேயாகும்.

தமிழர்கள், தமிழின் உயிர்ப் பகுதியாகிய இசைத் தமிழை வளர்க்கவே இம்முயற்சியில் தலையிட்டிருக்கின்றனர். இம்முயற்சி செட்டி நாட்டு அரசரின் அறச் சிந்தையாலும், நன்கொடை யாலும், நிறைவேறத் தொடங்கியிருக்கின்றது. இனி இம்முயற் சியை யாரும் தடுக்க முடியாது. இம்முயற்சியைப் பொதுமக்க ளும் ஆதரிக்கின்றனர்; இசைவாணர்களும் போற்றுகின்றனர்; தமிழன்பர்களும் பாராட்டுகின்றனர். ஆதலால் இசைத்தமிழ் இனி வளர்ச்சியடையும் என்பது உறுதி.

அன்றியும், அண்ணுமலை மகாநாட்டின் முடிவு கண்டு சிலருக்கு ஆத்திரம் உண்டான காரணம் விளங்கவில்லை. அங்கு வேற்று மொழிக்கோ, கலைக்கோ எதிரான முடிவு ஒன்றுமே செய்யப்பட வில்லை. அங்கு கூடியிருந்தவர்களுக்கு அத்தகைய உணர்ச்சி, எண்ணம் சிறிதுகூட இருந்ததாகத் தெரியவில்லை,

அண்ணுமலை மகாநாட்டுத் தீர்மானத்தில் தமிழ்ப் பாடல்களைப் பாடவேண்டும்; என்றுதான் தீர்மானம் செய்திருக்கின்றனர். தெலுங்குப் பாடல்கள் கூடாது; தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடக்கூடாது, என்று சொல்லவில்லை. தெலுங்கின் மீதோ, தியாகராஜ கீர்த்தனத்தின் மீதோ, எந்தத் தமிழன்பர்களுக்கும், தமிழிசைப் புலவர்களுக்கும் வெறுப்பில்லை; பகைமையில்லை.

செட்டி நாட்டு அரசர் வகுப்புவாதக் கருத்துடன் இக்காரி யத்திற்கு உதவி செய்யவில்லை; அரசியற் கருத்துடனும் இம்முயற் சிக்குத் துணை செய்யவில்லை. செட்டி நாட்டு அரசரை நன்ருக உணர்ந்தவர்கள், அவரால் அதிக உதவி பெற்று வருகிறவர்கள் எந்த வகுப்பினர் என்பதை அறிவார்கள். அவர் எந்த அரசியல் கட்சியிலும் கலந்துகொள்ளவில்லை; அரசியலை விட்டு விலகியே இருக்கிருர். ஆதலால் தமிழிசையை வளர்க்கவேண்டும் என்னும் அவருடைய நோக்கத்திற்கு, வகுப்பு வெறுப்பையோ அரசி யலையோ காரணமாகக் கூற முடியாது.

தமிழர்கள் தமிழ்ப் பாடல்கள் வேண்டுமென்று கேட்பது பிற மொழியின்மீது வெறுப்பாகுமா? தமிழில் நல்ல பாடல்கள் இயற்ற முயல்வது பிற மொழிக்குச் செய்யும் கெடுதியாகுமா? தமிழ்க் கலையை வளர்ப்பதற்குத் தமிழர்களும், தமிழன்பர்களும் செய்யும் முயற்சிக்குக் கூடவா தடை விளைவிக்க வேண்டும்? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்களைத் 'தமிழ்ப் பகைவர்கள்; தமிழ்க் கலை விரோதிகள்; தமிழரின் எதிரிகள்;' என்று கூறத் தொடங்கினால் அதை இல்லையென்று கூற முடியுமா?

முஸ்லிம்கள் தங்கள் கலைகளைக் காப்பாற்றவேண்டும் என்று கூறவில்லையா? அவைகளின் தனித்தன்மையை அழியாமற் காப்பாற்ற வேண்டும் என்பதையும் ஒரு காரணமாகக் காட்டித்தானே அரசியலிலும் பாதுகாப்புக் கேட்கின்றனர். அவர்கள் தங்கள் கலைகளையும் அவற்றின் கருத்துக்களையும் காப்பாற்ற முயல்வதை யாரேனும் குற்றமென்று கூறமுடியுமா? தடுக்க முடியுமா? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு மாத்திரம் ஏன் முட்டுக்கட்டை போட வேண்டும்? ஏன் வகுப்பு வாதம் கற்பிக்க வேண்டும்?

அண்ணுமலை மகாநாட்டுத் தீர்மானம் ஒரு வகுப்பினரால் நிறைவேற்றப்பட்டதன்று: ஒரு கொள்கையினரால் நிறைவேற்றதன்று; பல வகுப்பினரும், பல கொள்கையினரும் கூடிச்செய்த முடிவுதான் அது. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் அனைவரும் அம்மகாநாட்டிற் கலந்துகொண்டனர். அம்மகாநாட்டின் முடிவைப் பற்றிக் குறைகூறி, வீண் வகுப்பு வேற்றுமையையும், மொழி வேற்றுமையையும் கிளப்பி விடுவதற்குக்காரணம் நமக்கு விளங்கவில்லை. ''இந்து'' பத்திரிகை கூட, இந்த வீண் கிளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இம்மாதிரியே தமிழ்க் கலை வளர்ச்சிக்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிக்கும் ஒரு கூட்டம் தடை செய்துகொண்டிருந்தால் இறுதியில் தமிழர் நிலை எப்படி முடியும்? தமிழ்க் கலை வளர்ச்சிக்கு உதவி செய்யவேண்டியதே தமிழன்பர்கள் கடமை; தமிழ் நாட்டில் உள்ளவர்கள் கடமை.

தமிழ் நாட்டைப்போல் வேறு எந்த நாட்டிலும், அந்த நாட்டின் மொழியல்லாத வேறு மொழியிற் சங்கீதம் பாடுவதைக் கேட்க முடியாது. ஒவ்வொரு நாட்டினரும், தங்கள் தங்கள் தாய் மொழியிலேயே எல்லாக் கலைகளையும் வளர்ச்சி செய்து வருகின்றனர்; இல்லாத கலைகளையும் புதிதாக ஆக்கி வருகின்றனர். தமிழரைப்போலத் தாய் மொழிக் கலை உணர்ச்சியற்றவர்களை எந்த நாட்டிலும் காண முடியாது.

இப்பொழுதுதான் தமிழ்க் கலையுணர்ச்சி தமிழரிடம் புகுந்திருக்கிறது. பல வழிகளில் தமிழ்க் கலைகளை வளர்க்க முயன்று வருகின்றனர். இம்முயற்சியில் இசைக் கலை வளர்ச்சியும் ஒன்று. இசைக் கலை தமிழுக்குப் புதிதன்று. தமிழோடு பிறந்தது; தமிழோடு வளர்ந்தது. இன்றும் தமிழோடு இணை பிரியாமல் இயைந்து கிடக்கின்றது. இவ்வுண்மையை இசைவாணர் மறந்தனர். ஆதலால் இடைக் காலத்தில் மழுங்கிவிட்டது. அதை விளக்கவே அண்ணுமலைப் பல்கலைக் கழகம் முனைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் கலை வளர்ச்சித் துறையிலும் வீண் பகையையும் வெறுப்பையும் கிளப்ப வேண்டாமென்று இக்கூட்டத்தார்க்கு எச்சரிக்கை செய்கின்றேம்.

* * *

## இதற்கு ஈடாகுமா?

வளைந்து வளைந்தோடும் அந்த அருவி, வெண் மணலைத் தழுவிக்கொண்டு, தழதழத்த குரலில் பாடுவது கேளீர்! எந்தப் பாட்டு இதற்கு ஈடாகும்!

செடியும் கொடியும் தளிரும் இலையும், மலரும் கனியும், ஆடும் காரணம் அறியீரோ! அதோ, வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே, அவைகள் ஆடுகின்றன, நடன சுந்தரிகள் போல்!

பச்சிளங்கன்று, தாயைக் கூப்பிடும் குரல் கேட்டீரோ? அதிலுள்ள இசை இன்பமே தனியானது!

போர் வீரன், தனது உடலில் கவசமணிந்து, வாளை உறையினின்றும் எடுக்கிறனே, அச்சமயம் கிளம்பும் ஒலி வீர உள்ளம் படைத்தோர்க்கு இசை!

இம்மட்டுந்தானே! குழலா இனிது? யாழா இனிது? மக்களின் மழலையே இனிது. ஈடு எதிர் இல்லாத இசையாகும் இது!

இங்ஙனம் மக்கள் இசை இன்பத்தை, ஓடும் அருவியில், வீசும் காற்றில், விளையாடும் கன்றின் குரலில், கொஞ்சும் குழந்தையிடம், வீரரின் செயலில், காதலியிடம் காண்பர்! களிப்பர்!!

இசை இன்பம், இயற்கையிலும், தமது அன்புக்குரிய இடங்களிலும் இருக்கக் காண்பர். உள்ளத்தில் களிப்பு கொள்வர்! பிறகு, ஓடும் அருவி பாடினது என்ன? எனின், கூற இயலாது. இனிமை இருந்தது என்று மட்டுமே சொல்ல இயலும். களிப்புடன், கருத்துக்கு விருந்தும் இருக்கவேண்டுமாயின், இசை

இன்பத்தோடு பொருள் இன்பம் இழைந்து குழைந்து இருத்தல் வேண்டும். காதுக்கு இனிமையும், கருத்துக்கு இனிமையும் தேவை எனில், எம்மொழியில் இசை பாடப்படுகிறது என்பதைக் கவனித்தாக வேண்டும். இது பாடலைப் பொறுத்தமட்டில், இன்றியமையாததாகும். இசைக் கருவிகள், நாதத்தைத் தரும். மொழிப் பிரச்னை அங்கு இல்லை. ஆனால், வாய்ப்பாட்டுக்கு, மொழிப் பிரச்னை முக்கியம். அவர் பாடுகிறார் என்றால், "சஹானா ராக ஆலாபானம் செய்தார்; பிறகு இந்தக் கிருதியைப் பாடினார்; அதிலே ராம சௌந்தரியம் அழகாகக் கூறப்பட்டது" என்று தான் அக்கிரகாரமும் பேசும். சாஹித்தியம், சங்கீதத்துக்கு, மலருக்கு மணம் போன்றது. அந்த மணம், நறுமணமாக இருக்க வேண்டும் என்று தமிழர் கூறுகின்றனர். 'இது தகுமா? இது முறையா' என்று ஆரியர் ஆர்ப்பரிக்கின்றனர். ஒடிந்த உள்ளங்களை ஒன்றுக்குவிக்கும் இசை விஷயமாக இன்று, எழும் கிளர்ச்சி இதுவரை ஒடியாதிருக்கும் உள்ளங்களையும் ஒடித்துவிட முற்பட்டு விட்டது.

ராஜா சர். அண்ணாமலையார் ஆற்றியுள்ள அருந் தமிழ்த் தொண்டை, இங்ஙனம் திரித்துக் கூறி, அவரது முயற்சியைக் குலைப்பது கண்டு, நாம் மனங் கலங்கவில்லை. கொதிப்படையவுமில்லை. மாறாகக் களிக்கிறோம்! ஏனெனில், வகுப்புவாத நோக்கமற்று, இசைக்கும் தமிழுக்கும் அவர் தொண்டாற்றியதை ஆரியர் எதிர்ப்பதன் கருத்தை அவர் உணர இஃதோர் வாய்ப்பு! அதனை அவர் உணர்ந்து, அவரும் ஓர் 'வகுப்புவாதி'யாகிவிட்டால், அக்கிரகாரத்தின் ஆதிக்கம் அழிவது திண்ணம். ஆகவே இன்று ஆரியர் கிளப்பும் எதிர்ப்பு, அவர்களுக்கே கேடு தரத்தான் போகிறது என்று நிச்சயமாக நம்புகிறோம். அந்த நம்பிக்கை நமது மனதில் களிப்பை ஊட்டுகிறது.

"கூவுங்கள் ஆரியர்களே! கொக்கரியுங்கள்! தமிழ் மீது மோதிக்கொள்ளுங்கள். தமிழரின் முயற்சிக்கெல்லாம் தடை செய்யுங்கள். தமிழ்மொழியைத் தழைக்க விடாதீர்கள்; தமிழிலே வடமொழியை, ஆங்கிலத்தை, இந்தியை, கலக்கிக் குழப்புங்கள். தமிழன், தன்னைத் தமிழன் என்றுரைத்தால், சீறுங்கள். தமிழ் மொழியில் இசை இருக்கட்டும் என்றால், எதிர்த்துப் பேசுங்கள். கலைச் சொற்களுக்கு வடமொழியே இருக்கவேண்டும் என்று வாதாடுங்கள். தமிழனை, தாழ்ந்த ஜாதி என்று சொல்லுங்கள். கூட இருக்கக்கூடாது என்று கட்டளையிடுங்கள். கோயிலிலும் குளத்திலும் இழிவு படுத்துங்கள். சாப்பாட்டு விடுதிகளிலும், சாக்கடை இடத்தையே தமிழருக்குத் தாருங்கள். உமது ஆணவச் செயலை, திமிர் வாதத்தை, ஆரியத்தை நாம் வரவேற்கிறோம்.

ஆம்! உமது எதிர்ப்பு வளர வளரத்தான், தமிழனின் உள்ளத்தில் வேதனை பிறக்கும். வேதனை வளர்ந்தால், அவன் **வேல் பட்ட புலி போலச் சீறுவான்.** அந்தச் சீற்றம் கிளம்பி விட்டால், நாங்கள் 'ஜெயமுண்டு பயமில்லை மனமே' என்று பாடும் காலம் பிறக்கும்! 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற எண்ணம், உருவமாக அமையும் காலம் தோன்றும். சேரனும், சோழனும், பாண்டியனும் இறந்துபடினும், அவர்கள் காத்தாண்ட செந்தமிழ் நாட்டில், தமிழராட்சி தோன்றும். ஆகவே, ஆரியர்காள் ஆரம்பியுங்கள் உங்கள் போரை!'' என்று நாம் ஆரியரை அறைகூவி அழைக்கின்றோம்.

ஆனால், தமிழ் இசைபற்றிப் பேசும்போது, சொத்தைக் காரணங்களை ஆரியர்கள் கூறுகின்றனர். அது நமக்குப் பிடிக்கவில்லை. அறிவு படைத்த யாருக்கும் பிடிக்காது. தமிழ் இசை என்று ஆரம்பிக்கும் தமிழன், வேறு எங்குமே தமிழ் ஆட்சிதான் தேவை என்றல்லவா கூறத் தொடங்குவான். அது நமக்கன்றோ ஆபத்தாக முடியும். ஆகவே முளையிலேயே கிள்ளுவோம். தமிழ் உணர்ச்சியைத் தலைதூக்க ஒட்டாது அடிப்போம் என்பதே ஆரியரின் நோக்கம். தமிழகத்தின், தமிழ் உணர்ச்சி, தமிழர் என்ற உணர்ச்சியையும், தமிழ்நாடு தனிநாடு என்ற உணர்ச்சியையும் வளர்த்துவிடும் என்ற அச்சம் ஆரியரைப் பிடித்துக்கொண்டது. அதனை வெளிப்படையாகப் பேச வெட்கி, " இசையிலே மொழிப் போர் என்ன? தியாகய்யர் என்னுவது? சியாமா சாஸ்திரிகள், தீட்சிதர் கிருதிகள் என்னுவது?'' என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

அண்ணமலை நகரில் கூடினோர், மேற்படி கிருதிகள் அழிந்தொழிய வேண்டும் என்று கூறினாரில்லை. அவைகள் உள்ளன. ஆனால், தமிழ் நாட்டிலே, தமிழ் இசை இருக்கட்டும், அதற்கு ஆதரவு தேடுவோம் என்று கூறினர். இதற்கும் எதிர்ப்பு இருக்கிறதென்றால், பிறகு தமிழகத்துக்குத் தேவையில்லாதவைகளைத் துரத்தும் வேலை, மும்முரமாக நடக்கும் என்பது திண்ணம்.

''சுதேச மித்திரன்'' இதுபற்றி எழுதுகையில், ''நமது சங்கீத வித்வான்கள் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுகளை ஏன் அதிகமாகப் பாடுவதில்லை, கச்சேரி களை கட்டத்தகுந்த போதிய பாட்டுகள் தமிழில் இல்லாத தோஷந்தான் '' என்று எழுதுகிறது.

தமிழ் நாட்டிலே, தமிழர் முன்னால் பாட, போதிய பாட்டுகள் தமிழில் இல்லை! இதைவிட வெட்கக் கேடான நிலைமை வேறு இருக்க முடியுமா என்று கேட்கிறோம். தமிழனின் தன் மானம் இருக்கும் விதம் இது! அவனது நாட்டில் அவன் மொழியில் பாட்டு இல்லை!

ஜெர்மன் நாட்டிலே ஜெர்மன் மொழியில் பாடல்கள் உண்டு!
நீக்ரோ நாட்டில் நீக்ரோவின் மொழியில் பாட்டு உண்டு!
வங்காள நாட்டிலே வங்க மொழியிலே பாட்டு உண்டு!

தமிழ் நாட்டிலே, தமிழ் மொழியிலே பாட்டு, போதுமான அளவு கச்சேரி களை கட்டத் தகுந்த பாட்டு இல்லை! இது ஏன்? மித்திரன் கூறுமா? என்று கேட்கிறோம். தமிழர், நாடோடிக் கூட்டமா? இல்லை! பழங்குடி மக்கள்! இந்த நாட்டுக்குச் சொந்தக் காரர்கள்! தமிழர் அறிவுத் துறையிலே பழக்கமற்றவர்களா? இல்லை. பலப்பல இனத்தார் பக்குவமடையா முன்னம், அறிவுத் துறையில் மேலோங்கி விளங்கியவர்கள், தமிழர், இசை அறியா தவரா? இல்லை. அவர்களின் மொழியே இயல், இசை, நாடகம், என்று மூன்று முத்துகள் கொண்டது. பின்னர், ஏனய்யா தமிழ் நாட்டிலே போதுமான தமிழ்ப் பாட்டுகள் இல்லை என்று மித்திரனையும் மற்றையோரையும் கேட்கிறோம்.

குருடன் காணமாட்டான் செவிடன் கேட்க இயலாது, முடவன் ஓடமாட்டான் அதுபோல், தன் மானத்தைப் பறி கொடுத்த இனம், தன் கலை, தன் மொழி, தன் நிலை குலைந்து தவிக்கும். அத்தகைய நிலை தமிழனுக்கு ஏற்பட்டதனால்தான், தமிழிலே பாட்டு இல்லை என்று கூறும் கேவலமான, கொடிய, இழிவான நிலையிலே இருக்கவேண்டி வந்தது. மித்திரன் கூறி யுள்ளதை மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டுகிறோம்.

பண்டைப் பெருமை வாய்ந்த தமிழகத்திலே தமிழில் பாடல் கள் கிடையாது. ஆகவே விழியற்றவனுக்கு தடி துணைபோல் வேற்று மொழியிலே இசை பாடக் கேட்கிறான்.

இந்த நிலைமையை மாற்றி மற்ற எந்நாட்டிலும் உள்ளது போல், தமிழ் நாட்டிலே, தமிழ்ப் பாட்டுகள் வளர, வழி செய்ய தமிழ் வள்ளல் முற்படுகிறார். அதை 'மித்திரனும்' அவரது மித் திரர்களும் கெடுக்க முற்படுகின்றனர், அது ஏன்?

ஆரிய மித்திரர்கள் எண்ணம் அதுவல்ல! தமிழ் நாட்டிலே தமிழ்ப்பாடல்கள் இல்லை. வேறு பாடல்கள் உள்ளன. அதைக் கொண்டு திருப்தி அடையுங்கள் என்பது ஆரியரின் வாதம்.

தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாடல்களை வளர்க்கவேண்டுமென் றால், தமிழ்ப் பாடல்கள் பாடுவோருக்கு ஆதரவு தருவதாகவும், தமிழ்ப்பாடல்களைப் பாடும்படி ஊக்குவிக்க, கழகங்களும், இருந் தால் முடியுமா, வெறும் ஏட்டில் எழுதி வைத்தால் முடியுமா! எனவே, அண்ணமலை நகரில் கூடினோர், சங்கீதக் கழகங்களில்

தமிழ்ப்பாட்டுகளைத்தான் அதிகமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும், சங்கீத சபைகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்களையே அடுக்கி வித்வான்கள் அவற்றைப் பாடும்படி செய்யவேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

இதற்குத்தான் எதிர்ப்பு!

இன்று தமிழ்ப் பாடல்கள் இருப்பினும், பாடுவதில்லை. பாடினாலும், கச்சேரியின் கடைசி பாகத்தின், துக்கடாக்களாகவே இருக்கும். பாடகரின் முழுத்திறமையையும், இராக ஆலாபனத்திலும், பல்லவியிலும், கிருதிகளிலும், பாடிக்காட்டி, ஓய்ந்தபிறகு, "வித்வாம்சாள்" களித்தான பிறகு, விஷயமறியாத சாதாரண ஜனங்களுக்கு ஏதோ இரண்டொரு சில்லறை உருப்படிகள் பாடுவோம் என்று பாடகர், "சிக்கல் சிங்கார வடிவேலா உனை" என்று பாடுவார், இல்லையேல், "பித்தாபிறை சூடி" என்பார். கச்சேரி முடிகிறது. என்பதற்குத் தமிழ்ப்பாடல்களை அறிகுறியாக வைத்துக் கொண்டனர்.

இதற்குக் காரணம், சபை அல்ல! சபையினர் தமிழர். தெலுங்குக் கிருதிகள் அவர்களுக்குப் புரிவதில்லை. வித்வானுடைய அபார திறமையை, சபையிலே பலர் அவருடைய முகத்திலே தோன்றும், பலவித பாவங்களைக் கண்டோ, அவருடைய அவலட்சண அங்க அசைவுகளைக் கண்டோ, துடையில் போட்ட தாளம், அவிழ்ந்த குடுமி, நெகிழ்ந்த ஆடை, பக்க வாத்தியக்காரருக்கும் வித்வானுக்கும் நடக்கும் பார்வைகள், கனைப்புகள், கண் சிமிட்டல்கள், கால் தட்டுதல் இவைகளின் மூலமாகவோ தெரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. முன் வரிசையிலே உள்ள சிலருக்கு, வித்வானின் அருமை தெரிந்திருக்கும். ஆனால் சபை, முதல் வரிசையோடு முடிந்துவிடுகிறதா!

சபையினர் களிக்க முடியாத—ஏனெனில், தெரிந்துகொள்ள இயலாத—மொழியிலே பாடல்களை, வித்துவான்கள் பாடுவது தான், "வித்வத் இலட்சணம்" என்ற தப்பு எண்ணம் வளர்க்கப் பட்டு, அத்தகைய பாடல்களை, கற்றுக் கொடுக்கும் கழகங்களே அதிகரித்து, அத்தகைய பாடல்களையே போற்றும் சங்கீத சபைகள் வளர்ந்ததனால்தான் தமிழ்ப்பாடல்கள் வளரவில்லை. தமிழ்ப் பாடல்கள் அதிகரிக்கவேண்டுமானால், புதுப் பாடல்கள் இயற்றப் பட்டு அவைகளைக் கற்றுக்கொடுக்க கழகங்கள் உற்சாகத்தோடு முன் வந்து, அத்தகைய பாடல்களைப்பாடும்படி சங்கீத சபைகள் ஊக்குவித்தால்தான் முடியும்.

தமிழிலே, புதுவைக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் இயற்றி புத்தகக்கட்டு நிலையத்தில் தங்கினால் பயன் என்ன? பாடகர்கள் அவைகளைப் பயிலவேண்டும். பாடவேண்டும்.

தமிழ் நாட்டிலே தமிழ்ப்பாடல் தேவை என்று கருதுபவர், அண்ணாமலை நகர மாநாட்டார் முயற்சியை எதிர்க்கார். ஆரியர் எதிர்க்காமலிரார்! ஆரியர் எதிர்ப்புபற்றி நாம் அஞ்சத் தேவையுமில்லை. தமிழர், தமிழ் இசையை வளர்க்கத் தீர்மானித்து விட்டனர் என்ற செய்தியை, தமிழர் பொதுக் கூட்டங்கள் கூட்டி தெரிவித்துவிட்டனர். தமிழகம் இந்த முயற்சியில் முழு மனதுடன் ஆதரவு தருகிறது என்பது தெரிந்துவிட்டால், ஆரியர் சுருண்டுவிடுவர் என்பதும் திண்ணம். ஆரியத்தைக் காப்பாற்ற அவர்தம் ஆட்சியிலே போலீசும் ராணுவமும், பொக்கிஷமும், பிறவும் கொண்டும், முயன்றே தோற்றஆரியர்கள் விழித்த தமிழன் வெஞ்சினத்துடன் வீறுகொண்டெழுந்தால், என்ன செய்ய இயலும்?

தனித் தமிழ் கேட்டால், மொழிவளம் குன்றும் என்பர் தமிழ் இசைகேட்டால், சங்கீதக் கலை க்ஷீணமடையும் என்று கூறுவர்; தமிழர் அதிகாரம் வேண்டும் என்று கேட்டால், ஆட்சியிலே திறமை குறையுமே என்று கூறுவர்;; தமிழருக்கு சம உரிமை வேண்டும் என்று கேட்டால், பழங்கால பக்குவம் பாழாகுமே என்று பகருவர்; தமிழனுக்குத் தனிநாடு வேண்டும் என்று கேட்டால் பாரதமாதா பிரலாபிப்பாளே என்று பசப்புவர்-இது அவர்களின்—ஆரியர்களின் பழைய பல்லவி! இது இனி பலிக்காது!

* * *

## எங்கே அந்தக்கலை?

சேரனுடைய கொலுமண்டபத்திலே, கொண்டாட்டங்களின் போது, இசைவாணர்கள், "**வாதாபிகண**" பாடவில்லை.

சோழன் களிக்க, "**சுனே சுனே**" பாடவில்லை.

பாண்டியன் பரிபாலனத்தின்போது "**பலுகவே ஏமீனு**" என்று பாடவில்லை.

மூவரசர்கள் வாழ்ந்த நாட்களிலும், அதற்கு முன்பும், தியாகய்யர், சாஸ்திரி, தீட்சதர் கிருதிகள் பாடவில்லை. இசையே இல்லையோ? உண்டு! தமிழ் இசை பாடப்பட்டது. **அந்த இசை இன்று எங்கே?**

பொன்னும் மணியும் பொலிவுடன் விளங்க, வீரமும் ஈரமும் கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்கள் மற்றைய செல்வங்களை வளர்த்ததுபோல், கலைச் செல்வத்தையும் வளர்த்தே வந்தனர். தமிழகத்துச் சந்தனம், ரோம் சாம்ராஜ்யத்தில் வாடை வீசியது போல், தமிழ்க் கலையின் மணம், எங்கும் பரவி இன்பம் ஊட்டிற்று. எங்கே அந்தக் கலை இன்று?

சேர நன்னாட்டிளம் மங்கையர், வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பை, தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமரிகளுக்கு, பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான். எங்கே அந்தத் தமிழ்ப் பாட்டுகள்?

கதிரவன் காய்வதை அடக்கிக்கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில், கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது, "மாரு பல்கா, கொன்னுவே ஏமிரா"வுமல்ல, "சல்சல்ரே, நவ்ஜவா"னுமல்ல! தமிழ்! இன்று தமிழ் இசை போதுமான அளவு இல்லை என்று கூறும் நிலை வந்தது. காரணம் என்ன?

தமிழர், இசையை வளர்த்ததுபோல், வேறு இனத்தவர் வளர்க்கவுமில்லை, தமிழர் இசையை இழந்ததுபோல் வேறு யாரும் இழக்கவுமில்லை. தமிழனின் இன்றைய நிலை, இழந்த இன்பத்தைப்பற்றி, எண்ணி ஏங்குவதாகவே இருக்கிறது.

தமிழிலே நல்ல பாடல்கள் இல்லை என்பதைக் கேட்கும் தமிழன், தமிழ் இசை முன்னம் இருந்த தன்மையை அறிந்தால், தலையைக் கவிழ்த்துக் கொள்ளத்தான் வேண்டிவரும். அத்தகைய இசை இருந்தது—இன்று மறைந்தது! மறைந்தது, மீண்டும் வெளிப்பட, இன்று முயற்சிகள் செய்யப்படுகின்றன, அந்த மகஜ ஜதாரோவைக் கண்டு, ஆரியர்கள் மருளுகின்றனர்.

" தமிழர் காட்டுமிராண்டிக் கூட்டம். அவர்களுக்கு நாங்களே நாகரீக போதனை செய்தோம். தமிழர் மொழி வளமறியாக் கூட்டம். நாங்களே நூற்கள் வகுத்தோம். தமிழர், வாழும் முறை தெரியாக் கூட்டம். நாங்களே அவர்களுக்குச் சட்டதிட்டம், கட்டு, காவல் கற்றுக்கொடுத்தோம் என்று ஆரியர் கூறினர். ஆங்கிலேயரிடம். புத்தகங்களில் எழுதினர். பொதுக்கூட்டங்களில் பேசினர். தமிழருக்கு ஆசான், ஆரியரே என்று வெளிநாட்டாரிடம் கூறவே, வெளிநாட்டார், தமிழரை, ஓர் "லம்பாடிக்"

கூட்டம் என்றே எண்ணினர். ஒரு ராகவ ஐயங்கார் தமிழருக்கு "கற்பு" என்பதே தெரியாது என்றும் கூறத் துணிந்தார்!

ஜெர்மன் நாட்டு **மாக்ஸ் முல்லர்** ஆரியவர்த்தம், ஆரிய மொழி, ஆரிய நாகரீகம், ஆரிய மதம், என்பவைகளையே, ஐரோப்பியருக்கு எடுத்துக் கூறினார். தமிழர் என்ற உணர்ச்சி மங்கிற்று. ஆரியரின் பிரசாரம் ஆங்கில நாட்டவரையும் மயக்கிற்று. 'விபசாரியிடம் சிக்கி வீட்டிலுள்ளோரை இழிவு படுத்தி, வீட்டுப் பொருளைப் பாழாக்கும், காமாந்தகாரனின் கதைபோல, ஆரியரிடம் மயங்கிய ஆங்கிலேயன், நாட்டுக்குடையவர்களாகிய நம்மவரைப் புறக்கடையில் நிறுத்திவிட்டு, ஆட்சி மடத்திலே ஆரியரை சர்வாதிகாரியாக்கினர். தமிழர் தத்தளித்தனர். அந்த தத்தளிப்பு, தன்னுணர்வைத் தந்தது. தன்னைத்தான் அறியத் தொடங்கிய பிறகு, தமிழன், தான் இழந்தவைகளைத் தேடத் தொடங்கினான், தேடிக்கொண்டும் இருக்கிறான். தனது அழிவுக்குக் காரணம் என்ன என்று கண்டு பிடித்தான். அதனைக் களைய முற்படுகிறான், தூங்கியவன் விழித்ததுபோல், இன்று, தமிழரிடை ஒரு எழுச்சி உண்டாகி இருக்கிறது. இந்த மறுமலர்ச்சியைப் பல்வேறு துறைகளில் காண்கிறோம். தமிழ் மொழியில் துவங்கி தமிழ் நாடு என்ற எண்ணம் வரை, இந்த மறுமலர்ச்சி இருக்கிறது.

வழி தவறி அலைந்தவன், நேர் வழி தெரிந்து நடக்க ஆரம்பிக்கும்போது, செந்நாய் சீறினாலும், சிறுத்தை உறுமினாலும், சிந்தை கலங்கத் தேவையில்லை. நமது பாதையை நாம் விட்டு அகலோம் என்றே உறுதி கொள்ளவேண்டும். மனம் இருக்க மார்க்கம் இல்லாது போகுமா?

இத்தகைய மறுமலர்ச்சி, இன எழுச்சி - இயல்பு — இதுபோல் பல்வேறு நாடுகளில் நடந்துள்ளன. ஆனால் இங்கு இருப்பது போன்ற எதிர்ப்பு அங்கு இருந்ததில்லை.

15, 16-வது நூற்றாண்டுகளில், ஐரோப்பாவிலே, பல்வேறு நாடுகளிலே, இத்தகைய மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்தக் காலத்திலே விளைந்த பலன்களே அந்நாடுகளை மேன்மைப்படுத்தின.

பிரிட்டனிலே, (Tudor) டியூடர் மன்னர் காலத்திலே, மறு மலர்ச்சி ஏற்பட்டது. மதத்துறையிலே சீர்திருத்தம், மக்கள் மன்றத் துறையிலே மாறுதல்கள், கலையிலே ஓர் புதுமை, மக்கள் கருத்திலே ஒரு புதுமை தோன்றிற்று. சிறந்த இலக்கியங்கள் வெளிவந்தன. தன்னாட்டுணர்ச்சி, தன்மொழிப்பற்று, தன் மானம் ஆகியவைகள் தாண்டவமாடின. பின்னரே பிரிட்டன், பலமுள்ளதாயிற்று. பிரிட்டனிலே, கவிகள், எழுத்தோவியங்களை ஏற்படுத்திக்கொண்ட நேரத்திலேதான், பிரிட்டிஷ் கப்பல்கள்,

திரை கடல்களைக் கடந்து சென்றன. மக்கள் தீரச் செயல்கள் புரிந்தனர். பழங்காலம் என்பது எல்லாத் துறைகளிலும் மடிந்தது. எழுதுவது புது முறையில், பேசுவது புதுவிதமாக, இலக்கியம் புதுவிதமானது, என்ற நிலைமை ஏற்பட்டது.

ஐரோப்பா கண்டத்திலே, அறிவுலகமும் வீரர் உலகும் அமளியில் ஈடுபடும் விதமான, புரட்சிக்குக் காரணமாக இருந்த வால்டேர், ரூசோ, மார்ட்டின்லூதர் போன்றவர்கள், இத்தகைய மறுமலர்ச்சித்தோட்டத்தின் உழவர்கள்! அவர்களுக்கும், அவர்கள் புகுத்திய எண்ணங்களுக்கும், எதிர்ப்பு இருந்தது! இறந்தது!! இங்கும் இன்று மறுமலர்ச்சி காண்கிறோம். இதற்கு எதிர்ப்பும் காண்கிறோம். அந்த எதிர்ப்பு இறுதியில் மடியத்தான் போகிறது. கடல் அலையை, கைத்தடிகொண்டு அடிக்க முயலுவோனின், கை சலிக்குமேயொழிய, அலை சலிக்காது!

ஆனால், மற்றைய நாடுகளிலே நடந்ததற்கும், இங்கு நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அங்கெல்லாம் மறுமலர்ச்சியை எதிர்த்தவர்கள், வெறும் பழமை விரும்பிகள், இங்கு எதிர்ப்பவர்கள் பழமை விரும்பிகள் மட்டுமல்ல, இன்று இருக்கும் முறையினால், ஆதிக்கம் செலுத்தி வாழும் கூட்டத்தினர். மறுமலர்ச்சி, பழமையைப் பாழாக்குமோ என்பது அல்ல அவர்களின் பயம். நமது ஆதிக்கம் போய்விடுமே என்பதே அவர்களின் திகில். எனவேதான் இங்கு, எதிர்ப்பு கடுமையாக இருக்கிறது. இந்தக் கடுமையைப் பொருட்படுத்தாமல், புதிய எழுச்சிக்காகப் போரிடும் முன்னணிப் படையினர், தேசத் துரோகி, வகுப்புவாதி என்று ஏசப்பட்டு, தூற்றப்பட்டு வருகின்றனர். ஆனால் அந்த முன்னணிப் படை போட்டுவைக்கப்போகும் பாதையிலே, பட்டாளங்கள் பலப் பல பிறகு நடக்கும், மக்கள் மகிழ்ச்சியோடு அந்தப் பாதையிலே நடந்து புதூர் சென்று வாழ்வர் என்பது திண்ணம்.

தமிழரின் மறுமலர்ச்சியே தமிழில் ஏன் பிறமொழி கலக்க வேண்டும்? என்று கேட்கச் சொல்கிறது.

தமிழரின் மறுமலர்ச்சியே தமிழகத்திலே இந்தி கட்டாய பாடமா? என்று கிளர்ச்சி நடத்தச் சொல்லிற்று.

அந்த மறுமலர்ச்சியே, மார்க்கத் துறையிலே, ஆரிய ஆபாசங்கள் கூடாது என்று தைரியமாக எடுத்துக்கூறச் சொல்லிற்று. சமுதாயத் துறையிலே, நீ உயர்ந்தவன், நான் தாழ்ந்தவன் என்ற பேதம் கூடாது என்று கூறச்சொல்கிறது.

இத்தகைய ஒவ்வொரு முயற்சிக்கும் ஆரியர்கள் கூடி, தமிழரைக் கண்டிக்கின்றனர். தமிழ் இசைக்கு ஆதரவு தரவேண்டு

மெனப்படும் முயற்சியைக் கண்டித்து, சின்னாட்களுக்கு முன்னம், சென்னை ரானடே மண்டபத்தில், ஆரியர்கள் பேசினர். அவர்கள் வெளியிட்ட கருத்து, சங்கீதத்துக்கு நாதம்தான் பிரதானம், ஆகவே, எந்த மொழியில் சாஹித்யம் இருக்கிறது என்பதுபற்றி கவலை இல்லை. தெலுங்கு கிருதிகள் இருப்பது நல்லது- தமிழ்ப் பாடல்களைத் தேடிக்கொண்டிருக்கத் தேவையில்லை. தியாகய்யர் போல் தமிழகத்திலே ஒருவர் தோன்றியதும் தமிழ்ப் பாடல்கள் உண்டாகும்.—என்பதாகும்.

இசையை, மக்கள் கேட்டு இன்புற வேண்டுமானால், அவர்களுக்குத் தெரிந்த மொழியில் சாஹித்யம் இருந்தால் முடியுமே தவிர, சாஹித்தியம் வேறு மொழியிலே இருந்தால் முடியாது. நாதம் காதைக் கவரும், கருத்துக்கு என்ன அளிப்பது? தமிழனுக்கு தமிழ், தெலுங்கருக்குத் தெலுங்கு, வடவருக்கு வடநாட்டு மொழியில், சாஹித்தியம் அமைத்தால்தான், அந்த இசையைக் கேட்டதும் இன்புற முடியும்.

இப்போது தமிழ்நாட்டிலே நடைபெறும் கச்சேரிகளில் தமிழ் இசை எவ்வளவு விரும்பப்பட்டு வருகிறது என்பதையும் நாம் விவரிக்கத் தேவையில்லை.

தோழர் தியாகராஜ பாகவதரின் பாடல்கள் இன்று தமிழருக்குத், தெவிட்டாத விருந்தாக இருக்கிறது. அவருடைய குரல் அமைப்பு மட்டுமல்ல அதற்குக் காரணம், அவருடைய 'வித்வத்வம்' மட்டுமல்ல அதற்குக் காரணம், அவர் தமிழ்ப்பாட்டுக்களை, தெளிவாக, கேட்கும்போதே, பொருட் சுவையை மக்கள் ரசிக்கும் விதத்திலே பாடுவதுதான் முக்கியமான காரணம். சங்கீத வித்வான்கள், என்ற சன்னத்துகள் பெற்று விளங்குவதாகக் கூறப்படும் பேர்வழிகளிடம் உள்ள வித்தை பாகவதரிடம் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றியோ, 'சுரம்' போடுவதில் அவர் இன்னாரை விடக் குறைந்த திறமை உள்ளவரா என்பதுபற்றியோ, மக்கள் யோசிக்கவில்லை. அவசியமுமில்லை. பாகவதர் "மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை" என்று பாடினால், அது வீட்டிலே, வெளியிலே, இரவிலே, பகலிலே, கிழவர் குழந்தை உள்பட, பாடும் பாட்டாகி விடுகிறது. அழகும், அழுத்தம் திருத்தமும், பொருட்சுவையும் ததும்ப, "உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ" என்று பாகவதர் பாடினால் நாட்டினர் அதனைப் பாடுகின்றனர். காரணம் அவர் பாடுவது புரிகிறது. கேட்பவர் களிக்கின்றனர். அந்த இசை, கேட்போர் உள்ளத்திலே சென்று தங்குகிறது.

தோழியர் கே. பி. சுந்தரம்பாளின் இசைக்கு, தமிழர், நமது செவியையும் சிந்தனையையும் பரிசாக அளித்ததன் காரணமும் இதுவே. 'செந்தூர் வேலாண்டி—" என்று பொருள் விளங்க, பாடும்போது, இன்ன விஷயமாகப் பாடப்படுகிறது என்று புரிந்து கொண்டு பூரிக்கின்றனர்.

இசை விருந்தை இன்று அளித்துக்கொண்டு வரும் தோழியர் எம். எஸ். சுப்புலட்சுமி தியாகராயர் கீர்த்தனங்களைப் பல வருடப் பாடப் பழக்கத்துடன், பாடிக்கொண்டிருந்தபோது, வித்துவான் களுக்கு அறிமுகமாகி இருந்தாரேயொழிய, நாட்டு மக்களுக்கு அறிமுகமாகி இல்லை. ஏன்? நாட்டினர் எம். எஸ். எஸ். பாடுவது பிரமாதமான வித்தை அடங்கிய பாட்டு என்று கேள்விப்பட்டார் களே யொழிய அதன்சுவையை அனுபவிக்க முடியவில்லை. ஆனால், அதே எம். எஸ். எஸ். "மனங்குளிர" என்ற செந்தமிழ் இசையைப் பாடியதும், தமிழரின் மனமெல்லாம் குளிர்ந்தது. இசை நம்மை இழுத்து, சகுந்தலை கண்ட சோலை, சாலை, பசு, மான் கன்று, குயில், மயில் ஆகியவற்றை நமது மனக்கண் முன் நிற்கும்படி செய்தது. இசையின் இன்பத்தை மக்கள் முழுவதும் அடைய முடிந்தது.

தமிழ் இசைக்கு ஆதரவு இருக்குமா என்று கேட்கும் பேர் வழிகள், இசையரசு தண்டபாணி தேசிகரின் தமிழ் இசைக்கு உள்ள ஆதரவைக் கண்டுவிட்டுப் பேச விரும்புகிறோம். தேசிகரின் தமிழ் இசை, மக்களை எவ்வளவு உருக்குகிறது. பொருள் விளங்க, உணர்ச்சி ததும்ப அவர் நமது தமிழில் நம்மிடம் பாடுவதால்! மக்கள் உருகுவது இருக்கட்டும். தேசிகரே உருகுவதைக் காண லாம், தமிழ் இசை பாடும்போது!

மதுரை மாரியப்ப சுவாமிகள், சிதம்பரம் ஜெயராமன் திருவாரூர் நமச்சிவாயம் ஆகிய இசைமணிகளின் ஒலி நமது தமிழாக இருப்பதால் நமது நெஞ்சை அள்ளுவதைக் கூற வேண்டுமா?

நம்மவரின் நெஞ்சில் நேராகச் சென்று இன்பத்தைத்தர, தமிழ் இசையினால் மட்டுமே முடியும். அத்தகைய தமிழ் இசையை வளர்க்க, பாடகர்களும், கழகங்களும் முற்படுகின்றனர். வெளி மொழிக் கீதங்கள் என்ற முறையிலே இரண்டோர் கிருதிகள் பாடலாம். குற்றமில்லை, ஆனால் இசை என்றாலே அது தெலுங்கோ இந்துஸ்தானியோதான் என்ற பொருள்படும்படி கச்சேரிகள் இருப்பதை இனி, தமிழர் வரவேற்க மாட்டார்கள்.

"ராகப் பிரதானமுள்ள கீர்த்தனங்கள்" தமிழிலே இல்லை. இனி ஏற்படவேண்டும் என்று 'மித்திரன்' கூறுகிறது. ஆனால் இன்றுள்ள இசை வல்லுநர்களால், இத்தகைய ராகப் பிரதான முள்ள கீர்த்தனங்கள் இயற்ற முடியாது என்று மித்திரன் கூறத் துணிகிறதா என்று கேட்கிறோம். கர்நாடக சங்கீத வர்ணமெட்டு களை அனுசரித்து சில தமிழ்ப் பாட்டுகள் உள்ளன என்பதை மித்திரன்ஒப்புக்கொள்கிறது. அவைபோன்ற பாடல்கள் வளரவே அண்ணாமலை நகர் மாநாட்டினர் வழிவகை தேடினர்.

சங்கீதம் எந்த பாஷையா யிருந்தாலென்ன? என்று கூறு பவர்கள் ராக இலட்சணமே முக்கியம், சாஹித்ய இலட்சணம் முக்கியமாகாது என்று கூறுபவர்கள், திருவாவடுதுறை ராஜ ரத்தினம் அவர்களின் நாதஸ்வரமும், கும்பகோணம் ராஜமாணிக் கம் பிள்ளையின் பிடிலும் இருக்க, வாய்ப்பாட்டு வேறு ஏன் தேடு கிறார்கள்? அந்த நாதஸ்வரத்தில், ராக இலட்சணங்கள், போதும் என்கிற அளவுக்குக் கேட்கலாம்! ஜிலுஜிலுப்பு வேண்டுமா? கமகம் தேவையா? ஆலாபனத்தில் அலங்காரம் வேண்டுமா? எது நாதஸ்வரக்காரரால் முடியாது? தாளவரிசைகளிலே திறமை கள் கேட்கவேண்டுமா? பக்கத்திலே நிற்கும் தவுல்காரரைப் பார்த்தால் போதுமே! கோடி இடி கேட்கும்! சங்கீதம், வெறும் ராக இலட்சணம், நாதம், என்று பேசுவோர் நாதத்தை, நாதஸ் வரத்தில், பிடிலில், வீணையில், புல்லாங்குழலில் கேட்கின்றனர் என்றாலும், **வாய்ப்பாட்டும்** தேடுகின்றனர்! காரணம் என்ன? வாய்ப்பாட்டிலே நாதமும், நெஞ்சை அள்ளும் சாஹித்யமும் இருக்கிறது என்பதற்காகத் தான். நெஞ்சை அள்ளும் சாஹித்யம் தமிழருக்கு தமிழில் இருத்தலே முறை.

* * *

## முன்னாளில் இசை!

**"பொழிதரு நறுமலரே புதுமணம் விரிமணலே**
**பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே**
**முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே**
**யெழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே"**

பக்கத்திலே காதலி! எதிரே கடல்! யாழை வாசித்துக் கொண்டு, மேலே குறிப்பிட்டுள்ள இசையை இனிமையாகப் பாடு கிறான் இளமையும் செல்வமும் பொருந்திய கோவலன். மாதவி யின் மனம் மகிழப் பாடினான்! மாதவியோ, ஆடலிலும் பாடலி லும் தேர்ந்த அணங்கு. கோவலன் வணிகன். ஆயினும் அவன் பாடியது, மாதவியை மகிழ்விக்கும் விதத்ததாக இருந்தது.

நறுமலரே! விரிமணலே! மதிமுகமே! மின்னிடையே—என விளித்து, கோவலன், யாழை இசைத்து, கானல் வரி பாடிய

நாட்டினருக்குத்தான் இன்று, "கச்சேரிகளில், களை கட்டும் பாட்டுகள்" இல்லை, தெலுங்குக் கிருதிகள் போய்விட்டால், சங்கீதக் கலையே க்ஷீணமாகிவிடும் என்று "மித்திரன்" கூறும் நிலை வந்தது!

"மரகதமணித்தாள் செறிந்த
    மணிக்காந்தண் மெல் விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோலப்
    பன்னரம்பின் மிசைப் படர
வார்தல் வடித்தலுந் தலுறழ்தல்
    சீருடனுருட்ட றெருட்டலுள்ள
லேருடைப் பட்டடை யென
    விசையோர் வகுத்த
வெட்டுவகையினிசை கரணத்துப்
    பட்டவகை தன்செவியினோர்த்
தேவலன் பின் பாணியாதெனக்
    கோவலன் கையாழ் நீட்ட"

கோவலன், யாழை மீட்டி, இசைபாடி, இன்புற்றான்!

**வார்தல்** :—சுட்டு விரற் செய் தொழில்.

**வடித்தல்** :—சுட்டு விரலும் பெரு விரலுங்கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்.

**உந்தல்** :—நரம்புகளை உந்தி, வலிவிற் பட்டதும், மெலிவிற் பட்டதும், நிரல் பட்டதும், நிரலிழிப்பட்டது மென்றறிதல்.

**உறழ்தல்** :—ஒன்றிடை யிட்டும் இரண்டிடை யிட்டும் ஆராய்தல்.

என்று, மேற்படி செய்யுளில் வரும் பதங்கட்கு, அடியார்க்கு நல்லார் தரும் பொருளைப் படித்துவிட்டு, பிறகு, தமிழின் இசை உள்ளமும், இசை வளமும் எங்ஙனம் இருந்தது என்பதை ஆரியத் தோழர்கள் அறியட்டும்!

இசைச் சூழல்கள் எண்ணற்றன இருந்த இடம் இது! ஆங்கு இசை பயின்று இசை நுணுக்க முணர்ந்து ஏழிசையைப் பாடி வாழ்ந்தவரே தமிழர்.

சிறு வயது முதலே, இசையே தமிழரின் தோழன்.

ஊசல் வரி, கந்துகவரி, ஆற்று வரி, கானல் வரி, முதலியன இன்று, தமிழருக்கு வெறும் சொற்றொடர்கள்! முன்னாளில், அவைகள், இனிய இசைகள்!

**இசை** எனும் சொல்லுக்கே, வயப்படுத்துவது, இசைவிப்பது என்பது பொருள். இதனை தமிழர் நன்குணர்ந்து, பயன்படுத்தி வந்தனர். மகிழ்ந்தனர்; மகிழ்வித்தனர்.

தினைப் புனத்திலிருந்து ஓர் தீஞ்சுவை மொழியாள் தத்தை எனப் பாடுவாள்! அந்த இசை கேட்ட பறவைகள் இசைக்கு வயமாகி மயங்குமாம்!

மலையோரத்தில், குறிஞ்சி பாடக் கேட்ட மழகளிரு உறங்குமாம்! இனிய இசையில் மயங்கி "அசுணமா" எனும் இசையறி பறவை, எதிரில் தன்னை மறந்து நின்று, பிடிபடுமாம். ஆனினங்கள் அடங்குமாம்; மதங்கொண்ட யானையும் இசைக்கு அடங்கும் என்று கலித்தொகை கூறுகிறது. அது மட்டுமோ?

**"ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"**

அதாவது, கள்வரும், இசை கேட்டு, கொடுந் தொழில் மறந்து நின்றனராம்!

தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவிகள் என இசைக் கருவிகள் எண்ணற்றன இருந்தன.

தோற்கருவிகளில் மட்டும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை முதலிய 30-க்கு மேற்பட்டு இருந்தன.

இசைக் கருவிகளுக்கு **இயம்** என்றோர் பெயருண்டு. பலவகை இசைக் கருவிகளையும், வாசிக்கத் தெரிந்த காரணம் பற்றி ஒரு புலவருக்கு நெடும் பல்லியத்தனார் என்ற பெயரும் இருந்தது!

பாடுவோர் **பாணர்** என்ற தனிக் கூட்டமாகவும் இருந்து, தமது முதுகுகளில், வகை வகையான இசைக்கருவிகள் ஏற்றிக் கொண்டு, நாடு நாடு சென்று. பாடி மகிழ்வித்து, பரிசு பெற்று வாழ்ந்தனர்.

இன்னின்ன காலத்துக்கு இன்னின்ன இசை பாடுதல் பொறுத்த மென்றறிந்து பாடி வந்தனர். காலையில் மருதப் பண்ணும், மாலையில் செவ்வழிப் பண்ணும் பாடுவாராம்!

இசைத் தமிழின் இலட்சண விளக்கமாக, சிகண்டியார் என்பவர் **இசை நுணுக்கம்** என்ற நூலையும் நாடகத் தமிழுக்கு **செயிற்றியம்** என்ற நூலை, செயிற்றியனார் என்பவரும் இயற்றினர்.

ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற வடமொழிப் பெயர்களுடன் உள்ள சுரம் ஏழும், ஏழிசை என்ற பொதுப் பெயருடன் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற தமிழ்ப் பெயருடன் முன்னம் விளங்கின.

தமிழர் ஒரு சுரத்தை 16 ஆக பகுத்துணரும் பக்குவமும் பெற்றிருந்தனர்.

**ராகம்** என்று கூறப்படுவது, தமிழரால் **பண்** என்று குறிக்கப் பட்டு வந்தது,

ராக லட்சணங்கள் பொருந்திய தமிழ்ப்பாடல் இல்லை என்று கூறுவோருக்குக் கூறுகிறோம். தமிழரின் **பண்கள்** எண்ணற்று இருந்தன. வட மொழியில் **கரகரப்பிரியா** என குறிப்பிடப்படுவதே **படுமலைப் பாலைப்பண்** என்றும், **கல்யாணி** எனும் **ராகம், அரும் பாலை பண்** என்றும் முன்னுளில் குறிப்பிடப்பட்டது. **அரிகாம்போதிக்கு** தமிழர் அளித்த பெயர் **கோடிப் பாலைப்பண், பைரவிக்கு விளரிப் பாலைப்பண், தோடிக்கு செவ்வழிப் பாலைப்பண்** என இங்ஙனம் ராக லட்சணங்கள் எவ்வளவோ தமிழில் இருந்தன; மறைந் தன! ஆரியத்தால் மங்கின. அழிந்தனவும் உண்டு.

**ஆலாபனம்** என்ற இசை நுணுக்கத்தைத் தமிழர் **ஆளத்தி** என்று அழைத்து வந்தனர். ஆரோகணம், அவரோகணம், கமகம், என்பனமுறையே, ஏற்றம் இறக்கம், அலுக்கு என்ற பெயருடன் விளங்கின. தமிழர் அவைகளில் தேற்சிபெற்று தேன் தமிழை உண்டு வாழ்ந்து வந்தனர். இன்று, **இரவல் இசை** பெறும் நிலையில் உள்ளனர்.

எந்த பார்ப்பனர், மனு, 4-ம் அத்தியாயம், 15-ம் விதிப்படி இசை பயின்று, பொருள் ஈட்டக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருந் தனரோ, அதே ஆரியர்களின் சொத்தாக இசை இன்று கருதப் பட்டுவரும் நிலைமை ஏற்பட்டது.

அரியக்குடியார் அலறுகிருர், பாபநாசம் சிவன் பதறுகிருர், மருங்காபுரியார் மன வேதனைப்படுகிருர் என்று 'இந்துவும்' 'மித்திரனும்' முகாரி பாடியபடி உள்ளன. தமிழரின் அடாணு வெளிப்படும்வரை இசைபற்றி, இவர்கள் இறைச்சலிட்டபடிதான் இருப்பர்.

பாவ, ராக, தாளம் எனும் மூன்றும், இழைந்திருக்க வேண்டும் இசையிலே என்பர், இசை நூல் வல்லோர். **பாவம்** விளக்க மாக இருக்க, அவரவருக்குப் புரியும் மொழியில் பாடல்கள் இருந் தாக வேண்டும். தமிழருக்குத் தமிழ் மொழியில் பாடல் இருந்தால் தான் புரியும், சுவைக்க முடியும்- எனவே தமிழ் நாட்டிலே தமிழ் இசை தான் முக்கியமாகத் தேவை.

தமிழரின் இசைப்பற்று, தியாகய்யர் காலத்துக்கு பலப்பல நூற்ருண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்தது. தெலுங்குக் கீர்த்தனங்கள் தோன்ரு முன்னம், ராம கதையையோ, கிருஷ்ண

கோலாகலத்தையோ, கீர்த்தனங்களாக அமைக்கா முன்னம், தமிழரின் இசை, இறைவன் இயற்கை, இன்பம், எனும் மூன்று துறைகளை உள்ளடக்கியதாக, உணர்ச்சியும் உற்சாகமும் தரத் தக்கதாக இருந்தது. இசைக் கருவிகள் எண்ணற்று இருந்தன. இசை நூற்களும் உண்டு. இசைக்கடலில் நீந்தி விளையாடி மகிழ்ந் தனர் மக்கள். ஆணும் பெண்ணும் பாடுவர், ஆடுவர். அரசனும், மக்களும், இசை பயின்றனர், இன்புற்றிருந்தனர்.

கடலைக் கண்டால் ஓர் பாடல், கரியைக் கண்டால் ஓர் பாடல், தளிரைக் கண்டு ஓர் பாடல், தனது காதலியைக்கண்டு ஓர் பாடல் என, தமிழர், தமது இன்ப உணர்ச்சியை, இசை வடிவில் எத்துணையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர். இன்று தியாகராயர் கிருதிகளைவிட வேறு இல்லை என்று, அவர்கள் முன்னால் கூறப்படுகிறது.

இசைச் செல்வத்தை இவ்வளவு பெற்று முன்னம் வாழ்ந்த தமிழர், இன்று கேட்பது, தமிழ் நாட்டிலே தமிழ்ப் பாடல்கள் அதிக மாக இருக்கவேண்டும் என்பதாகும். இந்த முயற்சியில் தமிழர் வெற்றி பெற்றால், இழந்த தமிழ் இசையை மீண்டும் பெறமுடியும். ஆரியம், தமிழரின் எல்லாவகையான செல்வங்களையும் கொள்ளை கொண்டது போலவே இசைச் செல்வத்தையும் கொள்ளை கொண் டது. இதனை அறிய, தமிழர் தொன்மை பற்றி, ஆசிரியர் **சுந்தரம் பிள்ளை** எழுதிய அரிய நூலையும். மற்றையோரின் ஆராய்ச்சி நூற்களையும், தமிழர் படிக்கவேண்டுகிறோம். தமிழரின் மொழிவளம் ஆட்சிவளம், முதலிய துறைகள் பற்றி அரிய ஆராய்ச்சி உண்மைகள் மிளிரும், தோழர் **தேவநேயப் பாவணர்** எழுதிய **ஒப்பியன் மொழி நூலில்** உள்ளவைகளைத் தமிழர் கற்றுணர வேண்டும்.

தமிழ் இசை மறைந்து, வேற்று மொழியில் பாடல்கள் பரவி யதனால் நாம் **இன்பத்தை** மட்டுமே இழக்கவில்லை. இயற்கை யின் அழகை உணரும் அறிவையும் பகுத்தறிவுத் திறனையும் இழந் தோம். புதுப்பாடல்கள் புதுக்கருத்துகள் கொண்டதாக இருக்க வேண்டும் வெறும்பக்திரசம் மட்டுமே ஊட்டக்கூடியதாக இருத்தல் போதாது பக்திரசம் தமிழ் இசையில் இன்றும் உண்டு. ஆனால் ஆரியருக்கு அது பிடிக்காது. திருத்தாண்டகம், பிள்ளைத் தமிழ், போன்றவைகளைத் தோழர் **சுந்தரமூர்த்தி ஓதுவார்** எத்துணை இன்பரசத்துடன் பாடினார். தியாகய்யரின் ராமரசத்தை அருணா சலக் கவிராயரின் தமிழ்க் கீர்த்தனங்களில் காண ஆரியர் மறுப் பர். கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தன் பாடல்களும், சித்தர் களின் பாடல்களும். சுப்பராமரின் தமிழ்ப் பதங்களும் ஆரியருக் குப் பிடிக்கவில்லை. ஆகவேதான், தமிழிலே பாடல்கள் ஏது

என்று கேட்கின்றனர். தோழர் மாரியப்பசாமி எனும் இசைச் செல்வர், தியாகய்யர் கீர்த்தனை மெட்டுகளிலேயே, செந்தமிழில் கிருதிகள் அமைத்து, இனிய முறையில் பாடுகிறார்! ஆரியருக்கு அது பிடிக்காது. அவர்கள் அசல் ஆரியரசமே தேடுவர், பக்தி என்ற ரசத்தையும், ஆரியத்தோடு கலந்து பருகுவரே யன்றித் தமிழோடு கலந்து பருகச் சம்மதியார். காரணம், தமிழ் என்றால் அவர்களுக்கு வேம்பு! அதற்குக் காரணம் அந்த ஒரே மொழி தான் பரந்த இந்தியாவில் ஆரியப் படையெடுப்பை—தாக்குதலை, பொருட்படுத்தாமல், பணியாமல் சீரிளமைத் திறனோடு விளங்கு கிறது. அத்தகைய தமிழ், இசையில் மீண்டும் ஆதிக்கம் பெறு மானால் தமது கதி என்னாகுமோ என்று ஆரியர் பயப்படுகின் றனர்! தமிழில் இசை வளரக்கூடாதெனத் தடுக்கின்றனர். தமிழனுக்குத் தமிழ் இசையைப்பெற உரிமை உண்டு! அதைத் தடுக்க ஆரியருக்கு உரிமை இல்லை! ஆயினும் ஆரியர் தடுக்கின் றனர். தமிழரே, உமது கருத்து என்ன? என்ன செய்யப்போ கிறீர்! என்று தமிழரைக் கேட்கிறோம்.

"நாம் பெருங்கூட்டம்! அஃதோர் சிறு கும்பல்" என்றார். இனிமை ததும்பும் கருத்தை இளமையின் முறுக்குடன் கலந்து கவியாக உலகினோர்க்குக் கூறிய **ஷெல்லி** (Shelly) என்பார், கவியின் கருத்தை வெறும் எழுத்துக் கோவையாகக் கொண்டு நோக்குதல் கூடாது. பலன் தராது.

ஆயிரம் காக்கைக்கு ஓர் கல் போதும்! மான் மந்தையை சிறு ஓநாய்க் கூட்டம் விரட்டியடிக்கும்; பாம்பு, படையைக் கலக்கும். **ஷெல்லி** கூறிய கருத்து இங்கு பயன் தராது. கட்டுப்பாடும், உறுதி யும், உணர்ச்சியும் கொண்டதாக ஒரு பெருங்கூட்டம் இருப்பின், அதனை ஒரு சிறு கூட்டம் எதிர்த்துப் பயன் இல்லை என்பதே கவியின் கருத்து.

எண்ணிக்கையை விட இங்கு இயல்பே முக்கியமாகக் கவனிக் கப்படுதல் வேண்டும்.

தமிழ் இசை இயக்கத்தைப் பெருங் கூட்டம் ஆதரிக்கிறது. சிறிய கும்பலொன்று எதிர்க்கிறது. எதிர்க்கிறது என்றுரைப் பதைவிட எதிர்த்தது என்றுரைத்தால் பொருந்தும் என எண்ணு கிறோம். பல்வேறு கட்சிப்பற்றுடையவர்களும், தமிழினால் ஒன்றாக்கப்பட்டு, ஒரு மனமாகி, ஒத்த கருத்தை வெளியிட்டதைக் கேட்ட பிறகும், தமிழ் இசை இயக்கத்துக்கு இவ்வளவு ஆதரவு இருப்பினும், நாங்கள் எதிர்த்தே தீருவோம் என்று கூறும் அள வுக்கு, அந்தச் சிறு கும்பல், அறிவை இழந்து விட்டிருக்கும் என்று நாம் நம்ப மறுக்கிறோம். அவர்கள் நிச்சயமாக உணர்ந் திருப்பார்கள், தமிழ் இசையைத் தமிழர் ஆதரிக்கின்றனர்

என்பதை, எனவே எதிர்த்துப் பயனில்லை என்று தீர்மானித்து விட்டிருப்பர்

"தமிழ்ப் பாடல்களை சில்லறை உருப்படிகள் என்று கூறு கிறார்களே அந்தக் கெட்ட வழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று தோழர் **தியாகராஜபாகவதர்** கூறினபோதும், திருவாவடுதுறை **ராஜரத்தினம் அவர்கள்,** தமிழ்ப் பாடல்கள் பாடப்படாத கச்சேரி களுக்குப் போகாதீர்கள், தமிழ்ப் பாடல்களைப் பாடாத வித்வான் களை அழையாதீர்கள் என்று கூறியபோதும், என் கீர்த்திக்குக் காரணமே தமிழ்தான் என்று தோழர் **தண்டபாணி தேசிகர்.** அகங்குளிரக் கூறியபோதும், எந்தக் கூட்டத்தார் எந்த வகுப் பார், எந்தப் பத்திரிகைக்காரர் எதிர்த்தபோதிலும், தமிழர் அஞ்சத் தேவையில்லை என்று **குமாரராஜா சர். முத்தையாச் செட்டியார்** அவர்கள் கூறியபோதும், மண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும் கூடியிருந்த மக்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித் ததைக் கண்டோரறிவர் தமிழரிடை பிறந்துள்ள புத்துணர்ச் சியை! தமிழிலே சாஹித்யம் உண்டா? உண்டு என்றனர் சொற் பொழிவாளர்கள். பாடிக் காட்டினர் இசைச் செல்வர்கள். கேட்டுக்களித்தனர் மக்கள். கேட்டது போதாதென மேலும் மேலும் தமிழ்ப் பாடல்கள் பாடும்படி கேட்டனர். இது போதும், தமிழ் இசையை எதிர்க்கும் பேர்வழிகளின், கண்களைத் திறக்க! கருத்தைத் துலக்க!

இந்தப் பிரச்னே, தனிப்பட்ட தென்றோ, திடீரெனத் தோன்றிய தென்றோ நாம் கருதவில்லை. இசை விஷயமாக எழும்பிய இந்தக் கிளர்ச்சி, ஒரு மாபெருங்கிளர்ச்சியின் சிறுபகுதி; தமிழகத்திலே எழும்பியுள்ள மறு மலர்ச்சியில் ஒரு பாகம். இதனை எதிர்ப்போரின் செயலும் மறு மலர்ச்சியைக் கண்டு மனந் தாளாது எதிர்த்தொழிக்க எண்ணும் கூட்டத்தின் கொடுமை மிக்க செயல்களில் ஒன்று என்றே நாம் கருதுகிறோம். எனவே இந்தச் சமயத்தில், தமிழர், பொதுவாக உள்ள பெரிய பிரச்னையைச் சற்று கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

இன்று, தமிழருக்கு, எழுச்சி, இசை விஷயமாக மட்டும் வந்தில்லை! எதிர்ப்பும், அந்தத் துறையில் மட்டும் ஏற்படவில்லை!

மொழியிலே, கலப்புவேண்டாம் என்றோர் **எழுச்சி.**

இனத்திலே பற்றிருக்க வேண்டும் என்பதற்கோர் **எழுச்சி.**

நாட்டிலே, யாவரும் ஒன்றெனும் எண்ணந் தோன்ற வேண்டும் என்பதற்கோர் **எழுச்சி.**

நாட்டு எல்லை குறிக்கப்பட வேண்டும் என்றோர் **கிளர்ச்சி.**

நாட்டின் செல்வம், நாட்டினருக்குப் பயன்பட வேண்டும் என்று கூறுவது மற்ருேர் **கிளர்ச்சி.**

நாட்டுக்கு, நாட்டினருக்கேற்ற சட்ட திட்டங்கள் அமைய வேண்டும் என்று வலியுறுத்த ஓர் **கிளர்ச்சி.**

இன்னேரன்ன பிற கிளர்ச்சிகள், பல சிற்றருவிகள் கூடி ஆறு ஆவதுபோல், தமிழர் மறுமலர்ச்சி என்ற பெரியதோர் இயக்கமாதலே, கூர்ந்து நோக்குவோர் காணக்கூடும். தமிழர் அதனைக் கூர்ந்து நோக்கவில்லை. ஆனல் எதிர்ப்பாளர்கள் கூர்ந்து நோக்கிப் பார்த்துத் தான் ஒவ்வோர் கிளர்ச்சிக்கும் எதிர்ப்பை உண்டாக்கிப் பார்க்கின்றனர்.

அது ஒரு சிறு கும்பல்! ஆம்! மிகச் சிறு கும்பல்! ஆனல் சப்மெரைன்போல், மறைந்திருந்து தாக்கும் இயல்பு, விஷவாயு போல், பரவினதும் மாய்க்கும் கொடிய சக்தி, வெடிகுண்டுபோல், வீசப்பட்டதும் அரண்களைப் பிளந்தெரியும் வலிமை பெற்றது. இல்லையேல், சிறு கும்பல், பெரியதோர் கூட்டத்தை எங்ஙனம் எதிர்க்கத் துணியும்!

விக்டோரியா மண்டபக் கூட்டத்திலே தோழர் **டி. எஸ். சொக்கலிங்கம்,** தமிழை எதிர்க்கும் சிறு கூட்டத்தை ஜார் காலத்தில் இருந்த ரஷிய சீமான்கள் கூட்டத்திற்கு ஒப்பானது என்றுரைத்து, அந்தச் சரிதம் மீண்டும் நடைபெறும் என்று எச்சரித்தார்!

அந்தச் சிறு கும்பலின் சக்தி அவருக்குத் தெரியக் காரணமிருக்கிறது.

அந்தச் சிறு கும்பல், பெரும்பாலானவரை ஆட்டிப் படைக்கும் சூட்சிபற்றி அவர் அறிந்துகொள்ளாதிருக்க முடியாது; அவர் அதுபற்றி வெளியே பேசாதிருக்கிருர்! ஆனல் அன்று இசை, அவருடைய உள்ளத்திலே சென்று, உண்மையை இழுத்து வெளியே எறிந்தது என்றே நாம் நம்புகிருேம்.

" ரஷிய மொழி ஏழை எளியவர் மொழி, பிரெஞ்சு மொழி கனவான்கள் பேசும் மொழி; ஆகவே நாங்கள் பிரஞ்சு மொழி பேசுகிருேம் என்று உரைத்த ரஷிய சீமான் கும்பல்போல், இங்கு ஒரு சிறிய கூட்டத்துக்கு தமிழ்மொழியிடம் துவேஷமிருக்கிறது. இதுவரை அவர்கள் பெரும்பாலோரை அடக்கி ஒடுக்கி வாழ்ந்தார்களே அதையேதான் இம் மனப்பான்மையும் காட்டுகிறது" என்றுதோழர் **சொக்கலிங்கம்** கூறினர். உண்மை! ரஷ்ய சீமான்கள் பிரஞ்சு மொழியை "கனவான்கள்" மொழி என்று கூறினதுபோல், இங்கு ஒரு சிறு கூட்டம், சமஸ்கிருதத்தை

"தேவபாஷை" என்று கூறிக்கொண் டிருக்கிறது. பெரும்பாலானவர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சிபுரிகிறது. ஜார் காலத்து சீமான்கள் மன்னனும் மத குருமார்களும் வாழ்க, மற்றையோர் மாளினும் மாள்க என்றுரைத்ததுபோல் மனுவும்! மாந்தாதாவும் அருளியது, பூதேவர்களிடம் மற்றையோர் மண்டியிட்டே கிடத்தல் முறை என்று கூறுகிறது. ரஷிய சீமானுவது, ரஷிய உழவனே, பாட்டாளியோ தொட்டால் தீட்டு எனக் கருதினனில்லை! இங்குள்ள சிறு கூட்டம், பெரும்பாலான மக்கள் தொட்டால் தீட்டு என்று கூறுகிறது, அவர்களுடன் ஒன்ருக இருந்து உண்ண மறுக்கிறது, தொழ மறுக்கிறது, ரஷிய சீமானுக்காவது, ஆயுதங்கள் இருந்தன! இங்கே உள்ள சிறு கும்பலுக்கு அதுவுமில்லை. ரஷிய சீமானுவது ஆயிரம் வேலி நிலமுடையோன் - ஆபரணப் பேழையுடையோன், ஆயுதந் தாங்கிய ஏவலருடையோன் என்று கூறினன். இங்குள்ள சிறு கும்பலுக்கு அவைகளுமில்லை. எனினும், ரஷிய சீமான்கள் ஆட்டிவைத்ததைவிட, இங்குள்ள சிறு கும்பல், பெரும்பாலான கூட்டத்தை, ஆட்டி வைக்கிறது!

"அந்த ரஷிய ஜார் கூட்டம் அழிந்ததே அதே கதியைத்தான் இந்த அந்தஸ்து கூட்டமும் அடையும்" என்று தோழர் சொக்கலிங்கம் கூறினர். கேட்ட தமிழர் களித்தனர்.

அத் தன்மை படைத்த சிறு கும்பலின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதுபற்றி, எக்கட்சியைச் சார்ந்த தமிழருக்குள்ளும், கருத்து வேற்றுமை இல்லை என்பது அந்தக் கூட்டத்திற்குத் தெரியும்படி தமிழர்கள் நடந்துகொள்ளவேண்டும். தமிழ் மொழிக்கும் கலைக்கும் ஊறு நேராதபடி பாதுகாக்க தமிழர் திரண்டு விடுவது போலவே, தமிழரின் தன்மானம் பறிக்கப்படும்போது, தமிழர்கள், எந்தக் கட்சியினிடம் இருப்பினும். தமிழர் அணிவகுப்பில் வந்து சேரவேண்டும். தமிழரை, சமமாக நடத்த மறுக்கும் சிறு கூட்டத்தை எதிர்க்க ஒன்று சேரவேண்டும். தமிழ் நாட்டைப் பிற நாட்டாரோ, பிற இனத்தாரோ பங்கப்படுத்த, வளங்குன்றச் செய்ய, செல்வத்தைச் சுரண்ட முற்படும் வேளைகளில், தமிழர்கள் ஒன்ருகத் திரண்டெழ வேண்டும். தமிழரின் மறு மலர்ச்சிக்கு, இந்த எண்ணமே உறுதுணை. இந்த எண்ணத்துடன் தமிழர் பணியாற்றுவரேல், தமிழர் முன்னேறிவிடுவர் என்பது திண்ணம்.

இன்றுள்ள நிலைமை அங்ஙனமில்லை. தமிழ் நாட்டிலே தமிழன் தாழ்ந்த ஜாதி என்று, தமிழன் படிக்கும் சாஸ்திர, இதிகாச, புராணங்கள் கூறுகின்றன. தமிழனின் பணத்தால் நடைபெறும் நீதிமன்றங்களில், அதற்கேற்பவே தீர்ப்புகள் தரப்படுகின்றன.

தமிழனுக்குத் தமிழ் நாட்டிலே, தமிழரின் பணத்தால் கட்டி, தமிழரின் பணத்தால் பராமரிக்கப்படும் கோயில்களிலே, தமிழருக்கு சம உரிமை இல்லை. உண்டிச் சாலைகளிலே இல்லை.

தமிழ்நாட்டிலே தமிழனுடையமொழியிலே தகாத மொழிகள் கள்ளிபோல் படர்ந்துவிட்டன.

தமிழ்நாட்டிலே, தமிழனுக்கு வேலை கிடைப்பதில்லை; மோரிசுக்கும் ஜான்சிபாருக்கும், நெட்டாலுக்கும் மலேயாவுக்கும், பர்மாவுக்கும் இலங்கைக்கும் சென்று உழைத்து உருமாறி சிதைகிறான். வியாபாரம் தமிழனிடம் இல்லை.

கலை, தமிழனுடையதாக இல்லை. தமிழனுக்கு இழிவைத் தரும் கற்பனைகளும், அடக்கு முறைச் சட்டங்கள் கொண்ட ஆபாசங்களுமே தமிழனுக்குக் கலையாகத் தரப்பட்டுள்ளன.

இங்ஙனம், மொழி, கலை, சமுதாயம், பொருளியல் முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழன் இழிவுபடுத்தப்பட்டு வருவதன் காரணம், "சிறு கும்பலொன்று" ஆதிக்கம் செலுத்தி வருவதனால்தான்.

"எல்லோருமோர் ஒன்றென்னும் காலம் வந்ததே" என்று பாரதியார் பாடிய பிற்பாடுகூட, கால மாறுதலை அறியாமல், இவர்கள் நடப்பது வெறும் அறிவீனம். ஒருசிலர் சேர்ந்து கொண்டு தங்கள் சுயநலத்திற்காக மெஜாரிட்டியாரை அடக்கி ஆளும் காலம் கவிழ்ந்துவிட்டது" என்று தினமணி 1941 செப்டம்பர் 16-ந் தேதி இதழில் கூறியிருக்கிறது.

கவிழ்ந்துவிட்டதா? உண்மையாகவா? இல்லை! கவிழ்ந்துவிட்டிருக்குமேயானால், **நாம் பள்ளுப் பாடுவோம்!** இன்னமும் கவிழவில்லை. ஆனால் கவிழ்வதுமட்டும் உறுதி.

"பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என்றார் பாரதியார். ஆனால் நடக்கும் நிகழ்ச்சிகள் போச்சே, என்பதற்குப் பதிலாகப் போச்சோ என்று கேட்கவேண்டிய நிலைமையில் இருக்கிறது. இன்னும் சிறு கும்பல் சீறுகிறது! ஆதிக்கம் செலுத்துகிறது! தமிழரை எதிர்க்கிறது! தமிழரின் மறுமலர்ச்சியை அழிக்கக் கருதுகிறது. ஆம்! ஜார் அடைந்த கதியை அறிந்தும் அந்தச் சிறு கூட்டம் தனது ஆணவத்தை அடக்கிக்கொள்ளத்தான் இல்லை. **அதனை அடக்கத் தமிழர் எழுச்சிபெறவேண்டும்!**

—சி. என். அண்ணாத்துரை

* * *

## ராஜா சர். கூறுகிறார்:

தமிழிசை புதிதல்ல, தமிழிசை இயக்கம் படையெடுப்புமல்ல, அபசாரமுமாகாது. தமிழ் இந்நாட்டிற்குரிய மொழி. தமிழிசை இந்நாட்டிற்குரிய இசைச் செல்வம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழிசை செழித்து வந்தது. **தமிழர் இசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்கு தாயூற்றாக இருந்ததென்று தக்க புலவர் ஆராய்ந்து சொல்லுகின்றனர்.** தமிழிசை வழிவழியாகப் பெருகி வந்தது. பிறமொழிப் பாடல்கள் மிகச் சமீபத்திலேதான் தோன்றின. பிறமொழிப் பாடல்களில் மோகங்கொண்ட சிலர் தடைச் சுவர் எழுப்பினார்கள். இயற்கைக்கு விரோதமான இத்தடை எத்தனை நாள் நிற்க முடியும்? **தாயிடமிருந்து மக்களை எத்தனை நாள் பிரித்து வைக்க முடியும்?** தமிழர் உணர்ச்சி பெற்றெழுந்தனர். தாங்கள் இழந்த செல்வத்தை மீட்டனர். காலச்சுழலில் மறைந்துபோன கலைக்கோயிலைக் கண்டுபிடித்தனர்.

மறைந்துபோன பழம் பாடல்கள் இந்த இயக்கத்தால் புத்துயிர்பெற்று முழங்குகின்றன. புதிய பாடல்கள் எழுந்து இன்பம் தருகின்றன. கவிவாணரும் இசைவாணரும் ஆர்வமுடன் முன்வந்து தமிழிசையை வளர்க்கிறார்கள். இசையரங்கிற்குக் கூட்டங் கூட்டமாகத் தமிழர்கள் வருகின்றார்கள். தமிழிசை வேறெதற்கும் இளைத்ததல்ல என்பதை இசைவாணர்கள் விளக்கி விட்டார்கள். அரியபெரிய ஆவேசக் கவிஞர்கள் தமிழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். கண்ணிருப்பவர் தமிழிசைக்குள்ள பொது ஜன ஆதரவைக் காணலாம். காதிருப்பவர் எத்திசையிலும் தமிழை கேட்டு இன்புறலாம்.

நமது தமிழ் மொழிக்கு நலம்தரும் இந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பும் இடர்களும் முளைத்தன. ஆனால், தமிழிசை வேகத்தில் அந்த இடர்கள் தகர்ந்து போயின. எனினும், இன்னும் விதண்டா வாதங்களும் பிடிவாதங்களும் சிற்சில இடங்களில் காண்கின்றன. தமிழிசை எதிர்ப்பாளர் விநோதமான குறுக்கு வாதங்களைக் கிளப்பிக் கூச்சலிட்டனர். பத்தி பத்தியாகப் பத்திரிகைகளை நிரப்பினர்.

> "தமிழ், இசைக்குத் தகுந்ததல்ல. தெலுங்கு வட மொழிகளிலுள்ள நயம் தமிழுக்கு வராது. இசைக்கு மொழி வேறுபாடில்லை. அது நாத வித்தை. அதில் பாஷைப் பிரச்னையைப் புகுத்தக்கூடாது. தமிழில் பாடி

ஞல் கலை நயம் கெடும். சங்கீதத்தின் மாற்று குறையும். மதிப்பு கெடும். பாட்டு அருளால் வரும். பொருளால் வராது. ஏதோ சிலர் பணத்தைக் கொட்டி இசையைத் தமிழாக்கப் பார்க்கிருர்கள். அது கர்நாடக சங்கீதத்தையே காலேவாரி அடித்துவிடும். தமிழில் உயர்ந்த பாடல்கள் இல்லை.''

இவையே எதிர்ப்பாளர்கள் கிளப்பிய குறுக்கு வாதங்கள். இவ்வாதங்கள் இப்போது மறைந்து வருகின்றன. இன்று தமிழில் ஏராளமான பாடல்கள் வெளிவந்து முழங்குகின்றன. சங்கீதத்திற்கு வேண்டிய நயங்களெல்லாம் தமிழ்ப் பாடல்களில் இருப்பதை இன்று கண்டும் கேட்டும் ஆனந்திக்கிருேம். மிகச் சிறந்த தெலுங்குக் கீர்த்தனங்களேப்போலவே தமிழில் பலகீர்த்தனங்கள் வழங்குகின்றன. ஆயுளெல்லாம் பாடிக்கொண் டிருக்கலாம். தமிழிசை அமுத வெள்ளம் என்பதை இன்று நம் உள்ளம் உணர்ந்து சொல்லுகிறது. இக்காலத்துப் பிரபல வித்வான்களும் இதையே சொல்லுகிருர்கள். எதிர்ப்பாளரும் இதை உணர்ந்து தான் வருகின்றனர்.

ஆனல், சிலரிடம் உள்ள பிடிவாதம் இன்னெரு குறுக்குச் சால் ஓட்டியது. தமிசை இயக்கம் ஒரு ஜாதி இயக்கம். அரசியல் சதுரங்கம் என்ற வாதத்தைக் கிளப்பியது. தமிழிசை இயக்கம் தூய கலை இயக்கமே. அதில் அரசியல் கலப்பே இல்லை. ஜாதிப் பித்துமில்லை. சமஸ்கிருதத்தையோ, தெலுங்கையோ நாம் வெறுக்கவில்லை. மற்ற மொழியாளர் தமது தாய்மொழிப் பாட்டையே போற்றுவதுபோலத் தமிழர் தமிழ்ப்பாடல்களைப் போற்ற வேண்டுமென்கிருேம். தமிழிசை இயக்கம் அரசியல் சூட்சியல்லவென்பதை அழுத்தமாகச் சொல்லுகிறேன். இவ்வியக்கம் ஜாதிப் பிரிவினையை வளர்ப்பதல்ல. அதற்கு மாருக இவ்வியக்கம் ஜாதி மத கட்சி பேதமில்லாமல் யாரையும் பண்புடன் பழகச்செய்யும் ஒற்றுமை இயக்கமேயாகும். தமிழிசையில் எவ்விதமான வேறுபாடுமில்லாமல் தமிழர் உள்ளமெல்லாம் ஒன்றுபட் டிருக்கிறது. இந்தக் கலையொற்றுமை நாட்டின் ஒற்றுமைக்கு அரிய துணையாகுமென்பதை வற்புறுத்துகிறேன்,

**காலத்தை விணக்கும் எதிர்ப்பு வாதங்கள் பயனற்றுப் போயின** தமிழிசையை ஆந்திரர் எதிர்க்கவில்லை. அவர்கள் தமிழிசையைத் தமிழருக்கே விட்டுவிட்டுத் தமது பாட்டைப் பார்க்கின்றனர். தமிழிசையைத் தமிழரில் சிற்சிலரே எதிர்த்துப் போராடுகின்றனர். இதுதான் வருந்தத்தக்கது. இப்படி எதிர்ப்பவர் உள்ளத்தில் ''நமது வித்வான்கள் பழகிய தெலுங்கிசை வீணுகுமே, அவர்களுக்கு ஆதரவு குறையுமே''

என்ற பயமும் சந்தேகமும் குடிகொண்டிருக்கின்றன. வித்வான்கள் தமது அறிவையும் முயற்சியையும் தமிழிசை வளர்ச்சியில் செலுத்தட்டும். அவ்விதம் செய்வார்களானால், இப்பொழுதுள்ள அச்சமும் சந்தேகமும் நீங்கிவிடும். தமிழ் அவர்களுடைய தாய்மொழி. பிற மொழியைவிடத் தாய் மொழியில் அவர்கள் எளிதாகத் தங்கள் புலமையைக் காட்டலாம் அப்போது தமிழர்கள் அவர்களை வரவேற்று, மகிழ்வுடன் ஆதரிப்பார்கள். கலையும் செழிக்கும்.

மற்றோர் இடர் சில பத்திரிகைகளால் வந்தது, அவை தமிழிசை எதிர்ப்பாளருக்கே இடமளித்தன. தமிழிசையாளர் பேச்சை ஆதரிப்பதில்லை, வெளியிடுவதில்லை; வெளியிட்டாலும் இங்குமங்கும் விலக்கி, செய்திகளைத் தங்கள் இஷ்டப்படி வெளியிட்டன. இது நியாயமல்ல. இதுபோன்ற காரியங்கள் விசனிக்கத்தக்கவை. பத்திரிகைகள், எல்லாவற்றையும் சமமாகக் கருத வேண்டும்.

மற்றொருபுறம், சங்கீதம் அரண்மனையிலிருந்து பொதுமக்கள் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டதென்ற பேச்சைக் கேட்கிறோம். "சங்கீதம் சிலருடைய தனி உரிமையாக இருந்தது. இப்போது பொது உரிமையாகிவிட்டது. எல்லோரும் பாடக் கிளம்புகிறார்கள். எல்லாச் செவிகளும் பாட்டைக் கேட்கின்றன. பாட்டிற்குக் கூட்டம் பெருத்துவிட்டது, பாடகரும் பெருகிவிட்டார்கள்" என்று சிலர் சொல்லுகின்றனர். இசை எவர் மிராசுமல்ல, தமிழிசை தமிழரின் பொதுச் செல்வம். அதைப் பயிலவும் பாடவும் வல்லவருக்கெல்லாம் அது பொதுவாகும். இவ்வியக்கத்தில் பங்குகொண்டு, 'இன்னது பிழை' என்று திருத்தி, இசைப் பண்பை உயர்த்தப் பாடுபடும் புலவர்களைத் தமிழ் மக்கள் மகிழ்வுடன் போற்றுவார்கள். இசைக்கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும் கலைக்கோயிலில் அன்பு மயமாக விளங்கும்நாளே தமிழர் நன்னாள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தமிழ்க்கலை அந்நாளை நோக்கியே பவனி செல்கிறது. அப்பவனியில் சமரசப் பான்மையுடன் எல்லாத் தமிழரும் சேர்ந்து உதவ வேண்டும். எல்லா இசைவாணரும் தமிழிசையை ஆதரித்து அப்பவனிக்கு ஊக்கமளிக்கவேண்டும். இவ்வாறு கலைப் பவனியில் நாம் மன ஒற்றுமையுடன் சென்றால், வெறுப்பும் வேறுபாடும் ஒழிந்து, நமது சமுதாய வாழ்வு, அமைதியும் இன்பமும் அடையுமென்பது நிச்சயம்.

தமிழ்நாட்டில் நடக்கும் இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறவேண்டும். கச்சேரியின்

ஆரம்பமும் மங்களமும் தமிழ்ப் பாட்டுகளாக இருக்க வேண்டும். கச்சேரியின் பெரும்பகுதி தமிழ்ப் பாடல் களாக இருக்கவேண்டும். இடையிடையே இதர மொழிப் பாடல்களையும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிறமொழிப் பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரியைக் கேட்கும் தமிழருள்ளம், "இன்று தமிழிசையரங்கு நடந்தது; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது" என்று உணர வேண்டும். தமிழ் நாட்டில் நடக்கும் பாட்டுக் கச்சேரிகள் தமிழ ருக்கு இன்பமளிக்க வேண்டும். இதுதான் நமது நோக்கம்.

தமிழ் இசை நிகழ்ச்சியில் எல்லா வகுப்புவித்வான் களும் காண்கின்றனர். பிறமொழிப் பாடல்களும் காண் கின்றன. ஜாதி வேற்றுமையோ, பாஷை வேற்றுமையோ இங்கில்லை. தமிழர் எல்லோரும் சமமானவர்களே. இந்த உணர்ச்சியுடன் நாம் ஒன்றுகூடிக் கலையை வளர்த்தால் மன வேறுபாடும் இனவேறுபாடும் ஒழியும். ஆகையால் அன்பர்களே' தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த மக்களாகிய நாமெல்லோரும் ஒரே மனதுடன் **நம் தாய்மொழியாகிய தமிழில்** இசைக் கலையை ஆதரித்துப் போற்றுவோமாக!

* * *

## சர். ஆர். கே. எஸ். கூறுகிறார்:

---

சென்ற வருஷம் நான் அமெரிக்கா தேசத்திலிருந்தபோது, நான் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னமேயே பட்டணத்தி லிருந்து தினசரிப் பத்திரிகைகளெல்லாம் எனக்கு அனுப்பவேண்டு மென்று ஏற்பாடு செய்துகொண்டு போயிருந்தேன். அதே பிர காரம் எனக்கு 10 நாள், 15 நாளைக்கு ஒரு தரம் தினசரிப் பத்திரிகைக் கட்டுகள் வருவது வழக்கம். ஒரு நாள் தபால் மூலமாகப் பத்திரிகைக்கட்டு வரும்போது என்னுடைய அறையிலேயே அமெரிக்கா தேசத்து சிநேகிதர் ஒருவர் உட் கார்ந்து கொண்டிருந்தார். நான் என்னவோ வேலையைக் கவனித்துக் கொண்டிருந்ததால் இந்தப் பத்திரிகைக் கட்டைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரம் பார்த்து விட்டு, "என்ன உங்கள் ஊரில் ஒரு புதிய சண்டை ஆரம்பித்திருக்கிறது போலிருக்கிறதே" என்று கேட்டார். என்ன விசேஷமென்று

கேட்டபோது, சென்னப்பட்டணம் தினசரி ஒன்றைக் காட்டினர். அதில் இந்தத் தமிழிசை விஷயமாக சச்சரவுகள் நடந்துகொண் டிருப்பதைப் பற்றியும், கூட்டங்கள் நடந்துகொண்டு வருவதைப் பற்றியும் விவரமாய் எழுதியிருந்தது. நான் "வாஸ்தவம்தான்; ஒரு கலவரம் ஏற்பட்டிருக்கிறது. என்று சொன்னேன். "ஏன்? இந்த விதமாகக் கலவரம் வரக் காரணம் என்ன"வென்று கேட்டார். நான் சொன்னேன்: "இப்பொழுது தமிழில்தான் பாட்டுக்கள் பாடவேண்டுமென்று கேட்கிறோம். அதற்குச் சில கூட்டத்தாரும், பாகவதர்களும் ஆட்சேபணை செய்கிறார்கள். அதனால் தான் இந்தக் கலவரம் ஏற்பட்டது" என்று சொன்னேன். உடனே அந்த மனிதர் "இப்படி ஏன் தமிழில் பாடவேண்டுமென்று கேட்க வேண்டும்" என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்ட மாதிரி ஆகிவிட்டது. என்னடா இந்த மனிதர் ஆந்திர தேசத்தி லிருந்து வந்தவரா என்று சந்தேகம் உண்டாகிவிட்டது! "ஏன், தமிழில்தானே நாங்கள் பாடவேண்டுமென்று கேட்கிறோம். அதில் என்ன தப்பிதம்?" என்று கேட்டேன். "ஏன், உங்கள் தாய் பாஷையில் சங்கீதம் இல்லையா? தமிழில் பாடவேண்டு மென்று ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார். அப்பொழுது எனக்கு அர்த்தமாகிவிட்டது. அதாவது நம் தாய்பாஷையில் இப்பொழுது சங்கீதம் நடக்கிறது என்றும், அதுவல் லாமல் வேறொரு பாஷையில் நாம் இப்பொழுது கேட்கிறோம் என்றும் அவர் அர்த்தம் செய்துகொண்டு கேட்டார்.

அதற்கு "இல்லை, எங்கள் தாய்பாஷை தமிழ்தான். தமிழ் நாட்டில் "தமிழில் பாடவேண்டுமென்று கேட்கிறோம்" என்று சொன்னேன். "அப்படியா சமாச்சாரம்! இந்தியாவைப்பற்றி— மேல்நாட்டினருக்கு, இங்கிலிஷ்காரர்கள், அமெரிக்கா தேசத் தார்கள் இவர்களுக்கு—சமாச்சாரங்களைப் படிக்கப் படிக்க சந்தேகம் ஏற்படும் என்பது தெரிகிறது. உங்கள் விஷயங்களை அர்த்தம் செய்துகொள்ள முடியவே இல்லை. ஒரு தேசத்தில் சங்கீதம் எப்படி இருக்கவேண்டுமென்கிற நிலைமையில் மக்கள் இருக்க வேண்டுமானால் அவர்கள் தேசத்தின் நிலைமை என்ன என்பது விசித்திரமாகத்தா னிருக்கிறது!" என்றார். இம்மாதிரி நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது சைனா தேசத்து எழுத்தாளர் ஒருவரும் இருந்தார். நீங்கள் அவர் பெயரைக்கூட அறிந்திருக்க லாம். **லின்யுடாங்** என்பது அவர் பெயர். அவர் ஒரு பெரிய ஞானி பெரிய எழுத்தாளர். உடனே இது விஷயமாக ஒரு தர்க்கம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் சொன்னார். "இரண்டு முக்கியமான விஷயங்கள் மனிதன் வாழ்க்கைக்கு வேண்டியன. இந்த இரண்டு விஷயங்களிலும் எந்த ஊரைச் சுற்றினாலும்,

நாடோடித்தனம் செய்தாலும்கூட அவனவன் தேசத்தின் விஷயங்கள் தான் அவனுக்கு ருசியைக் கொடுக்கும்'' என்றார். அவை என்னவென்றால் ஒன்று சாப்பாடு, மற்றொன்று சங்கீதம். "நான் சைனாவிலிருந்து வந்து அதிக நாளாயிற்று. அமெரிக்கா தேசத்துச் சாப்பாட்டை சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழகிவிட்டது வாஸ்தவம் தான். இருந்தாலும் சைனா தேசத்துச் சாப்பாட்டை, எவனாவது ஒரு புண்ணியவான் ஒருநாள் போட்டால், அன்றுதான் எனக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது'' என்றார் அந்த சைனா தேச அறிஞர். அதேமாதிரித்தான் சங்கீதமும். ஏதோ ஒரு நாள் நான் கன்னிமாரா ஹோட்டலில் 'டின்னர்' சாப்பிடுகிறமாதிரி, வேறு பாஷையில் கேட்டுக்கொண்டேயிருந்தால் அதனால் ஆத்மதிருப்தி யுண்டாகாது. இது எனக்கு மிகவும் உண்மையாகப்பட்டது. ஏறக்குறைய 9 மாதம் அமெரிக்கா போய் அந்த தேசத்துச் சாப்பாடுதான் எப்பொழுதும். நம் சாப்பாடு இல்லையே என்று எனக்கு அதிக வியாகூலம். அவர் தம் சைனா தேசத்துச் சாப்பாட்டைப்பற்றி சொன்னவுடன் எனக்கு நம் தேசத்து இட்லி சாம்பார் ஞாபகம் வந்தது. அமெரிக்கா தேசத்திலிருக்கும் சாப்பாடு, இட்லி சாம்பாரை விட விலை அதிகமானது; விசேஷமானதும்கூட தான். இருந்தாலும் இரண்டு நாள் நன்றாயிருந்ததே தவிர, நம் இட்லி சாம்பார் மேலே தான் எனக்கு ஞாபகம். இந்த தத்துவம் கொஞ்சம் தெரிந்தால் தமிழ்நாட்டிலே தமிழ் இசை இயக்கம் என்பது ஏன் வந்தது என்கிற கேள்வி கேட்க இடமே இருந்திராது.

நானும் இந்தத் தமிழிசை இயக்கம் ஆரம்பித்தது முதல் யோசித்துப் பார்த்தேன். உலகத்தில் எந்த தேசத்தை நாம் உதாரணமாக எடுத்துக்கொண்டாலும், இந்தத் தமிழ் நாட்டைத் தவிர மற்ற எந்த நாட்டிலாவது சங்கீதம் அந்த தேசத்தின் தாய் பாஷையிலல்லாமல் வேறுபாஷையிலிருக்கிறதா என்று கவனித்துப்பார்த்தால் கிடையவே கிடையாது. இந்த விசித்திரம் தமிழ் நாட்டில் தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்தியாவில் மற்ற மகாணத்திலாவது, மற்ற தேசங்கள் எதிலாவது, இந்த மாதிரி ஆபத்து தாய்மொழிக்கு வந்தது கிடையாது. தமிழ் மொழியின் நிலைமை எப்படி யிருக்கிறதென்று கேளுங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு, அதாவது உத்தியோகம் பார்க்க வேண்டுமானால், இங்கிலீஷ் படிக்கவேண்டும். கலியாணம், கருமாந்திரம் முதலியவைகள் செய்வதானால் சமஸ்கிருதத்தில் செய்ய வேண்டும். தேசாபிமானி என்கிற பெயரெடுக்க வேண்டுமானால் ஹிந்தி படிக்கவேண்டும், சங்கீதம் பாடத் தெலுங்கு படிக்கவேண்டும். சாதாரணமாகப் பேசும்போது "நேற்று உங்களை 'மீட்' பண்ணும்போது ஒரு 'மேட்டர்' (Matter) சொல்லு

வதற்கு 'கம்ப்ளீட்' (complete) ஆய் மறந்துபோய் விட்டேன் சார்'' என்று இந்தமாதிரி மணிப்பிரவாளமாகப் பேசவேண்டும். இப்படி யிருந்தால் தமிழுக்கு நாம் கொடுத்திருக்கும் ஸ்தானம் தெரியவரும்!

ராஜா சர் அண்ணுமலேச் செட்டியாரவர்களும், திரு. சிதம்பரநாத முதலியாரவர்களும், சம்பந்த முதலியாரவர்களும் தமிழிசையின் விசேஷத்தைப்பற்றியும், தமிழில் பெரிய கீர்த்தனங்கள் இருக்கின்றன, இசை இருக்கிறது என்றும் சொல்லுகிருர்கள். இருக்கிறதோ இல்லேயோ அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றிக் கவலேயுமில்லே. தமிழில் என்ன இசை இருக்கிறதோ அந்த இசை எனக்குப் போதும். சில பெரியவர்கள் ஏதாவது பிரசங்கம் செய்யும்போது, நம் நாட்டு சங்கீதம் பற்றி சொல்லும்போது தமிழிசை, தெலுங்கு இசை, கர்னுடக சங்கீதம், பீதோவன் இவைகளேப்பற்றி சொன்னுல் பீதோவன் நன்ருயிருக்குமென்று நாம் பீதோவனே எடுத்துக்கொள்வதா? என்னுடையடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்ம திருப்தி உண்டாகிறதோ, அந்த திருப்தி எனக்கு வேறு எந்த பாஷையில் பாட்டுக்கேட்டாலும் உண்டாகாது. ஆகையினுல் தமிழிசை 2,000 வருஷத்திற்கு முன்பிருந்தே இருக்கிறதோ இல்லேயோ, விசேஷமோ என்னவோ. தமிழனுகப் பிறந்த எனக்கு தமிழிசைதான் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நான் யாரிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமுமில்லே. கேட்பதாய் உத்தேசமுமில்லே. சாதாரணமாய் மனிதர்களுக்கு இயற்கையாக உண்டாகும் உணர்ச்சியின் காரணமாகத் தமிழிசை இயக்கம் உண்டாயிற்று. அது உண்டானவுடனே பெரிய கலாட்டா—எதிர்ப்பு—புதிது புதிதான வியாக்யானம் எல்லாம் எழுந்தன. 'சங்கீதத்திற்கு சாகித்தியம் போதும், பாஷை வேண்டாம்; தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சி.' இந்தமாதிரி எல்லாம் கேள்விப்படுகிறேம். அச்சியலில் சூழ்ச்சி என்னவோ இருக்கிறது. ஆனல் அது தமிழிசை இயக்கத்திலிருக்கிறதா? அல்லது அதை எதிர்ப்பவர்களிடத்திலிருக்கிறதா? என்றுதான் தெரிய வேண்டும்.

அனுபவிப்பவருக்குச் சங்கீதம் தெரியாது, ராகமும் தெரியாது தாளமும் தெரியாது. பாட்டை அனுபவிக்க வேண்டுமென்ருல் அந்தப் பாட்டின் அர்த்தம் தெரியாமல் எப்படி அனுபவிப்பது? அரசியல் சூழ்ச்சி என்று சொல்லுகிருர்கள். நம் ராஜாசர். அவர்கள் எங்களிடத்தில் அரசியல் சூழ்ச்சி இல்லேயென்று சொன்னுர். இன்னும் 50 தரம் சொன்னுலும் அதை ஒருவரும் கேட்கப்போவதில்லே. ஆனல் எனக்கு ஒரு சந்தேகம், **நமக்கும் தெரியாமலேயே சூழ்ச்சி செய்து விட்டோமோ என்பதுதான்!**

* * *

## சி. ஆர். கூறுகிருர் :

---

சங்கீதம் கேட்கிறவர்கள் எதற்காக வருகிருர்கள்? ஏதாவது கடமையைச் செலுத்த வரவில்லை. சந்தோஷத்திற்காக வருகிருர்கள். அல்லது பலன்பெற வருகிருர்கள். அதை நாம் கவனிக்க வேண்டும். அதை நாம் கவனித்தோமானல் இந்த இசை இயக்கத்தைப்பற்றி இருக்கிற அபிப்பிராய பேதங்கள் அநேகமாகக் குறைந்து போகுமென்று நான் நினைக்கிறேன். இந்த இசை இயக்கத்தைப்பற்றி வித்தியாச அபிப்பிராயம் இருப்பதற்குக் காரணம், தாங்கள் முன்னலேயே மனதில் வைத்துள்ள அபிப்பிராயத்தை அப்படியே பத்திரமாக வைத்துக்கொண்டு ஆக்ஷேபிப்பதாக நான் எண்ணுகிறேன். இந்த இயக்கத்தின் நோக்கம் என்ன என்பதைப்பற்றி ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தெளிவாக விளக்கிவிட்டார். அதை யாரும்—தமிழர் யாரும்-ஆக்ஷேபிக்க முடியாதென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த இசை என்பது என்ன என்றும், இயக்கம் என்பது என்ன என்றும், நாம் அறிந்தோமானல் வித்தியாசங்கள் போய் விடுமென்பது என் பூரண நம்பிக்கை.

சங்கீதம் என்ருல் சப்தங்களை—கேட்க இனிமையான சப்தங்களை—திரட்டி இணைத்து அதை எல்லோரும் கேட்கும்படி செய்வது. இதற்கு இசை, சங்கீதம் (Music) என்று பெயர். இதற்கு வாத்யம் போதும், அதற்கு வீணைபோதும், இதற்கு புல்லாங்குழல் போதும், இதற்கு பிடில் போதும் என்று சொல்ல வேண்டியதே இல்லை. ஹார்மோனியத்தைப்பற்றி பேச்சே வேண்டியதில்லை. மனித ஸ்வரூபமே இல்லாமல்—மனிதக்குரலே இல்லாமல்—சங்கீதம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனல் மனிதனுடைய குரலை அதில் சேர்த்தும் சங்கீதம் செய்யலாம், மனிதன் குரல் சங்கீதத்தில் பிரதானமாகச் சேர்ந்தவுடனே மனிதனுக்கு காக்கை, குருவிபோல் பேச்சில்லாமல் சுவரம் மாத்திரம் நீண்ட நேரம் செய்ய முடியாது; ஆகையினல் பேச்சும், சொல்லும், மொழியும் கலந்து போகிறது. அதில் மனிதன் குரல் ஒரு சங்கீதத்தை உண்டாக்கி ஜனங்களுக்கு திருப்தியோ, சந்தோஷமோ உண்டாக வேண்டுமானல் அதில் மனிதன் பேசும் மொழியும் சேர்ந்து போகிறது. சங்கீதம் வேறு, மொழி வேறு என்பது நிச்சயம். பாத்திரம் வேறு, ஜலம் வேறு என்பது நிச்சயம். ஆனல் நான் ஒரு டம்ளர் பால் சாப்பிடுகிறேன் என்ருல் பாலையும் டம்ளரையும் சேர்த்துச் சாப்பிடுவதில்லை. பால் மட்டும்தான் சாப்பிடுகிறேன். டம்ளரில் வைத்துத்தான்

சாப்பிடுகிறேன். டம்ளர் இல்லாமலும் சாப்பிடலாம். அதாவது கன்றுக்குட்டி முதலியவைகள் டம்ளர் இல்லாமலும் குடிக்கும். டம்ளரில் போட்டு காப்பியோ, பாலோ சாப்பிடுவதும் உண்டு. எப்படிச் சாப்பிட்டாலும் உண்மையில் குடிப்பது பால்தான். சங்கீதம்தான் கேட்கிறேன். மனிதன் மொழிகளுடன் சேர்த்துக் கேட்கும்போது ஒரு தனி சந்தோஷம் உண்டாகிறது. அந்த மனிதன் குரல்சேர்ந்தவுடன் என்ன சொல்லுகிருர் என்றும் கூடவே மனம் கேட்கிறது. சங்கீதம் மனதில் ஏறுவதுடன், என்ன சொல்லுகிருர் என்பதும் கூட ஏறுகிறது. ஏதோ எனக்கு விளங்க வில்லையென்றும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்; அல்லது விளங் கியும் கேட்டுக்கொண்டிருக்கலாம். சங்கீதம் வேறு, பாஷை வேறு என்பது நிச்சயமாயிருந்த போதிலும் மனிதசாரீரத்தில் வரும்போது பேச்சும் அந்த சங்கீதமும் ஒன்ருயிருக்க வேண்டுமென்பது பழைய முறை. நியாயமான முறை. சங்கீதம் சோக ரசமாயிருந்து, ராகமும் சோக ரஸமாயிருந்து பேச்சு ஏதோ வேறு விஷயமா யிருந்தால்—அரிசி இவ்வளவு விலை, பருப்பு இவ்வளவு விலை என்று தோடி ராகத்தில் பாடினுல்—நன்ருயிராது. பேச்சு என்று ஏற்பட்டவுடன் ராகமும் பேச்சும் ஒன்றுக்கொன்று சம்பந்த மிருக்க வேண்டும். எப்படி உடம்பும், ஆத்மாவும் ஒன்ருகிறதோ அப்படியே இரண்டும் ஒன்ருகப்போய், கேட்கும்போது பிரம மானந்தம் உண்டாகிறது என்று சொல்லுகிருர்கள். அப்படிப் பட்ட இன்பம் வேண்டுமா? வேண்டாமா? மொழியைப் பற்றிக் கவனமே வேண்டுமா வேண்டாமா என்கிற வாதம், பிரமாதமாக இந்த இசை இயக்கத்தில் அடிபடுகிறது. மொழி பற்றி வித்தியாசம் எற்பட்டபடியால், மொழியே வேண்டாம் என்கிற வாதம் போட்டால் நம் கக்ஷி பலமாகப் போய்விடுகிறது என்கிற உத்தேசத்தின்மேல் சங்கீதத்திற்கு மொழியே வேண்டாம் என்று சிலர் சொல்லுகிருர்கள். இது எப்படி யிருக்கிறதென்ருல் தென்கலை வேண்டுமா, வடகலை வேண்டுமா என்று கேட்டால் ஹிந்து மதமே வேண்டாம். சிவன் கோவில் வேண்டுமா. விஷ்ணு கோவில் வேண்டுமா என்று கேட்டால் கோவிலே வேண்டாம், என்று இப்படிச் சொல்லிக் குறுக்கடியாக வாதம் செய்து முடித்துவிடலாம் என்பதற்காக முடித்துவிடுகிருர்கள். அதற்கு ஆதரவாய் சங்கீதம் வேறு பாஷை வேறு என்ற உண்மையான தத்துவமிருந்தாலும், மனிதக் குரலில் கேட்கும்போது, அந்தக் குரலில் மொழிகள் வரும்போது, அந்த மொழிகள் அர்த்தமில் லாமல் வேறு ஏதோ சப்தமாக-முரசின் சப்தமாய்-தம்பட்டையின் சப்தமாயிருப்பதற்குப் பதில் சங்கீதத்தின் ரசத்திற்கு இணைந்ததாக நமக்கும் விளங்கும் மொழியாக இருந்தால்-இசையாக இருந்தால் சந்தோஷமாக இருக்கும் என்பதுதான் நம் தமிழிசை இயக்கத் தின் நோக்கம். கர்நாடக சங்கீதத்தைத் தகர்த்தெறி

வதற்காகவாவது கர்னாடக சங்கீதத்தைக் கெடுப்பதற்காகவாவது இந்த இயக்கம் என்று சொன்னால் அது எனக்குத் தெரிந்தமட்டில் சுத்த தவறு, அப்படி இல்லவே இல்லை.

தேசத்தில் நம் பாஷை, சர் ஷண்முகம் செட்டியாரவர்கள் சொன்னபடி உலகத்திலேயே சந்தி சிரிக்கும்படியான நிலைமையி லிருக்கிறது.

கொஞ்சநாள் முன்பு ஒரு சபையில் சொன்னார்கள். எதிர்க் கக்ஷியில் இருக்கிற பெரியவர்கள், இரண்டு மூன்று பேர் பேசினார் கள். ஒருவர் சொன்னார், தீக்ஷிதர் திருவிழா அன்று. சங்கீத வித்துவான்களுக்கு ஒரு உரிமை உண்டு. என்ன உரிமையென் றால் சங்கீதத்தை கேட்கிறவர்கள், சாகித்தியம் இருக்கிறதே—பேச் சில் உள்ள சாகித்தியம், அதன் பொருளை மேல்வாரியாகவாவது அறிந்துகொண்டு கேட்டால்தான் உண்மையான ஆனந்தம் உண் டாகும் என்று சொன்னார். நியாயம். அதே உரிமைதான் இப் பொழுது நாமும் கேட்கிறது. ஆனால் இசையை, கீழே இருந்து கேட்பவர்கள் உரிமை என்ன? சங்கீதம் பாடுகிறவர்கள் சாகித்தி யம், நாம் மேல்வாரியாகவாவது அர்த்தம் செய்துகொள்ளும்படி யான பாஷையில் இருக்கவேண்டுமென்பதுதான். வித்தியாசம் ஒன்றும் கிடையாது. இன்னொருவர் சொன்னார். அவர் பெயரையும் சொல்லலாம். சர் சி. பி. ராமசுவாமி ஐயர். அவர் சொன்னார். சங்கீதத்தில் பொருளும் பதமும் இல்லாமல் கேட்டுக்கொண்டிருந் தால் அதற்கு "tingling of symbols" என்று சொன்னார். பொரு ளற்ற இசை, ஏதோமாதிரி ஆனந்தமே தவிர வேறு பிரயோஜன மில்லை யென்று சொன்னார். இதேதான் இந்த இயக்கத்தின் மூலாதாரம்.

நம் நாட்டிலே பாட்டு என்றால் இரண்டு விஷயத்திற்கு உப யோகிக்கப்படுகிறது. ஒன்று கடவுள் பக்தி. இன்னொன்று பெண் பக்தி—காதல். காதலுக்கும், தெய்வபக்திக்கும், இரண்டுக் கும் வேண்டும் பாட்டு. நம் தேசத்தில் பண்ணனது இப்படி நடைபெற்று வருகிறது. சங்கீதத்திற்கு உயிர் இருக்கிறதே அது இந்த பக்தியிலும், காதலிலும்தான் இருக்கிறது. இந்த தேசத்தில் என்ன ஆகிறது. மனிதனுக்கு பாஷையே இல்லாமலிருந்தாலும் பாஷை உண்டாகிறது. மனிதனுக்கு நாதமே இல்லாமலிருந்தா லும் சங்கீதம் உண்டாகிறது. அப்படித்தான் தியாகையர் கீர்த்த னங்கள் பாடினார் தமிழ்நாட்டிலிருந்து. அவர் தமிழ் நாட்டிலிருந் தாலும் தோன்றி அப்படியே பக்தி பெருகியதும் மொழியும், பாட் டும், சங்கீதமும் ஒன்று சேர்ந்து ஒருவரே சங்கீதமும், சாகித்யமும் செய்தார். தானகவே உண்டாயிற்று அந்த சங்கீதம். 4, 5 பேர்

சேர்ந்து கொல்லத்து மேஸ்திரி, வீடு கட்டுவதுபோல். நீ செங்கல் கொண்டுவா, நீ சுண்ணும்பு கொண்டுவா, ஓடு, ரயிலில் வருகிறது. நான் எல்லாம் சேர்த்து வீடு கட்டுகிறேன் என்று சொல்வது போல் இல்லை. ஆனால், தியாகய்யர் செய்த கீர்த்தனங்கள் அப்படியே அவர் ஆனந்தத்திலிருந்து உண்டாயின. அப்படி உண்டாகும்படியான நிலைமையில் நாமில்லை என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. தியாகையருக்கு முந்தி சங்கீதமே இல்லையா? உலகத்தில் எவ்வளவோ பல்லாயிர வருஷம் கழிந்த பிறபாடும் இருக்கும். புதிதாக உண்டாக்கக் கூடியவர்கள் வருவார்கள், அதற்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். அதுவரையில் வேறு ஒன்றும் வேண்டாமென்று சொல்லக்கூடாது. தியாகையர் தமிழில் பாடுவதற்குப் பதில் தெலுங்கில் பாடினார். அது ஒன்றே போதும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு. தமிழ்நாட்டிலேயே வளர்ந்து தமிழ் தேசத்திலே புகழ்பெற்றவர். ஏன் தெலுங்கில் பாடினார். தெலுங்கு நல்லதென்று அதில் அவர் பாடவில்லை. தெலுங்கு தாய் பாஷையானதால் அவர் அதில் பாடினார். நாமும் நம் தாய் பாஷையில் பாடினால்தான் நம் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும், கடவுளுக்கும் காது கேட்கும்.

யாராவது ஒருவர் இப்பொழுது காதலில் விழுந்தோமென்று வைத்துக்கொள்ளுங்கள். நான்தான் காதலில் விழுந்தேனென்று வைத்துக்கொள்ளுங்கள். வயது 80 என்று வைத்துக்கொள்ளுங்கள். காதல் கடிதம் எழுதவேண்டுமென்றால் நான் நல்ல இங்கிலீஷ் தெரிந்த ஒரு ஆளிடம்போய் நீ இங்கிலீஷ் காதல் கடிதம் (love letter) ஒன்று எழுதிக்கொடு. நான் என் காதலிக்கு அனுப்ப வேண்டும். என்னால் எழுதமுடியாது. நீ எழுதித்தா. அதை நான் அனுப்பிக் காதலை வளர்த்து ஜயிக்கவேண்டும் என்றால், அது முடியாது. இங்கிலீஷ் லவ்-லெட்டர் வாங்கி நான் அனுப்பினால் எவ்வளவு சிரிப்பாயிருக்கும், ராமனுக்கு அல்லது கிருஷ்ணனுக்கு நான் லவ்-லெட்டர் அனுப்பவேண்டுமானால் என் தாய் பாஷையில் எனக்குத் தோன்றிய முறையில் எழுதி, என் அன்புக்குத் தோன்றியபடி நான் பாடவேண்டுமே தவிர இதற்காக மிக நல்ல சங்கீதம் என்று எடுத்து அதை நான் பாடினால் என்ன உணர்ச்சி எனக்கு உண்டாகும்? எனக்கு உண்டாகா விட்டால், கடவுளுக்கும் உண்டாகாது. நிச்சயம். இது தான் இந்த இயக்கத்தின் த்ததுவம். 10 பேர் மட்டும் கேட்டால் போதாது. கோடிக்கணக்கான ஜனங்கள் கேட்டு சந்தோஷிக்க வேண்டிய விஷயம். **எல்லோருக்கும் தெரிந்த பாஷையில் பாடவேண்டும்.**

* * *

# தமிழ் இசைச் சங்கம்

---

தமிழ் நாட்டில் நடைபெறும் சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுகளுக்கு முக்கிய ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்ற உணர்ச்சி பரவி வருவது யாவரும் அறிந்த விஷயம். இந்தவிருப்பம் நிறைவேறும்மாறு சென்னையில் ஸ்தாபித்திருக்கும் தமிழ் இசைச் சங்கம் பல துறைகளில் முயன்று வருகிறது. தமிழில் பல புதிய கீர்த்தனங்கள் முதலியவற்றை இயற்றுவதும், தமிழ்ப் பாடல்களைப் பலருக்குக் கற்பிப்பதும், தமிழ் இசை சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்துவதும், சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களுக்கு முக்கிய ஸ்தானம் கொடுப்பதும், இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்.

ரூபாய் 1000-மும் அதற்கு மேலும் நன்கொடையாகத் தருகிறவர்கள் சங்கத்தின் மெம்பர்களாவர்கள். இம்மாதிரி பல அன்பர்கள் நன்கொடை யளித்து மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

சங்கத்தின் நிர்வாகம் 7 ட்ரஸ்டிகள் கொண்ட ஒருபோர்டால் நடைபெற்று வருகிறது-

1. ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார். (தலைவர்)
2. ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார், (உப தலைவர்)
3. திவான்பகதூர் ஸி. எஸ். ரத்தினசபாபதி முதலியார்
4. திருவாளர் பி. எஸ். சாத்தப்ப செட்டியார்
5. ராவ்பகதூர் வி. எஸ். தியாகராஜ முதலியார்
6. திருவாளர் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார்
7. திருவாளர் ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்

89, சிங்கண்ண நாய்க்கன் தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

டி. எஸ். கச்சாபிகேச முதலியார்,
கௌரவ காரியதரிசி
டி. வி. கமலசாமி,
உதவிக் காரியதரிசி.

## தமிழிசைக் கல்லூரி, சென்னை

கீவளூர் எஸ். மீனாட்க்ஷிசுந்தரம் பிள்ளை—ஆசிரியர்
தஞ்சை பொ. கிட்டப்பா —உதவி ஆசிரியர்

* * *

கவி பாரதிதாசன் இயற்றிய

புதிய காவியம்

★

# பாண்டியன் பரிசு

★

விலை ரூ. 3-8-0

★


முல்லைப் பதிப்பகம்

பிராட்வே : : சென்னை

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி.டி., சென்னை

# உணர்ச்சி தரும் நூல்கள்!

☆

புரட்சிக்கவி பாரதிதாசன்
இயற்றிய கவிதை நூல்கள்
அனைத்தும்
தமிழ் இலக்கியச் செல்வம்

☆

முல்லைப் பதிப்பகம்
பிராட்வே :: சென்னை